வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 14.06.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 190 | பக்கங்கள் : 16

# புலம்பெயர் சமூகம் தொடர்பில் திறந்த நிலையில் உள்ளோம்

## மனித உரிமைகள் பேரவையில் பீரிஸ்

- வெளிப்புற சாட்சிய சேகரிப்பை நிராகரிக்கிறோம்
- இராணுவ பிடியிலிருந்த 92வீத காணிகள் விடுவிப்பு
- பிரச்னை தீர்வுக்காக பிரதமர், ஜனாதிபதி ஒருமிப்பு



**ஜெனிவா, ஜூன் 14**

**புலம்பெயர் சமூகத்துடன் இலங்கை திறந்த நிலையிலேயே உள்ளது. நாட்டின் ஜனநாயக விழுமியங்களையும் மனித உரிமைகளையும் பேணுவதில் முன்னேறியுள்ளது. இதேசமயம், அரசியலமைப்புக் கட்டமைப்புக்குள் மாற்றங்களை கூட்டாக ஏற்படுத்த முயல்கிறோம் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், பயங்கரவாதத் திருத்தச் சட்டத்தை திருத்தியுள்ளோம். அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 22 பேரை விடுதலை செய்துள்ளோம். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இழப்பீடுகளை வழங்க மேலதிகமாக 53 மில்லியன் ரூபாயை வழங்கியுள்ளோம்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள 92 வீத நிலப் பரப்பை உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது 15

## அதிகரிக்கிறது வறுமை;

## 40 சதவீத குடும்பங்களின் மாத வருமானம் ரூ. 27,000

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் வாழும் ஏழ்மையான 40வீதமான குடும்பங்களின் மாத வருமானம் சராசரியாக ரூ. 26,931 ஆகும். இதனால், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இந்த குடும்பங்கள் மூன்று வேளை உணவை கற்பனையில்கூட காண முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. 15

## மனைவி, பிள்ளைகளின் அழுத்தமே பஸில் வெளியேறக் காரணமாம்!

கொழும்பு, ஜூன் 14

மனைவி, பிள்ளைகளின் நிர்ப்பந்தத்தாலேயே பஸில் ராஜபக்ஷ தற்காலிகமாக அரசியலிலிருந்து வெளியேறினார் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் நிதி அமைச்சரான பஸில் ராஜபக்ஷ கடந்த வாரம் தமது பாராளுமன்ற உறுப்புரிமையை துறந்தார். அவரின் இடத்துக்கு கோடீஸ்வரரான தம்மிக பெரேரா நியமிக்கப்பட்டார். பஸிலின் விலகலுக்கு அரசாங்கத்துக்குள் அதிகரித்த நெருக்கடிகளும் அழுத் தங்களுமே காரணம் என்று 15

## பதிவு பெற்ற நிறுவனங்களுக்கு மதுபான அனுமதி!

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 14

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் மென்மையான மதுபான அனுமதிப் பத்திரங்களை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இந்த விடயத்தை தனது சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் நாட்டுக்கு வெளிநாட்டு வருவாயையும் கொண்டு வரவும் உதவும். இலங் கையில் சுற்றுலாவுக்கு கிடைத்த பெரிய வெற்றி இது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)



பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் - பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா நேற்று வெகுவிமர்சையாக நடைபெற்றது. பதுவைப் புனிதரான அந்தோனியார் தேரில் ஏறி வீதி உலா வந்து பக்தர்களுக்கு ஆசிர் வழங்கினார். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அந்தோனியாரைத் தரிசிக்க வருகை தந்திருந்தனர்.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஜூன் 14

“ராஜபக்ஷக்கள் தத்தமது சுயவிருப்பின் பிரகாரம் பதவிகளிலிருந்து விலகலாம். ஆனால், அவர்களின் அரசியலுக்கு ஒருபோதும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது” - என்று நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்துள்ளார்.

மேலும், ”மே 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகினார் என்றும், ஜூன் 9ஆம் திகதி தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பஸில் ராஜபக்ஷ 15

## நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எமக்கு 18 மாதங்கள் வேண்டும்!

### பிரதமர் ரணில் கூறுகிறார்



கொழும்பு, ஜூன். 14

தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு, நாட்டின் பொருளாதாரம் உறுதித்தன்மைக்கு வருவதற்கு சுமார் 18 மாதங்கள் எடுக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை தற்போது பெரும் டொலர் நெருக்கடி மற்றும் கடன் பிரச்னையை எதிர் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் 15

## பின்தங்கிய மக்களுக்கான நிவாரணத்தை உறுதிசெய்க!

### வலியுறுத்துகிறது ஐ. நா. மனித உரிமை பேரவை

ஜெனிவா, ஜூன் 14

இலங்கையில் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள மக்களுக்கான நிவாரணத்தை உறுதி செய்ய வேண்டும். மீளெழுச்சி திட்டங்கள் தொடர்பான பேச்சுக்களின்போது சமூகப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 50 ஆவது அமர்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சில உலக நாடுகளில் பொருளாதார மற்றும் பிற நெருக்கடிகள் காரணமாக மனித உரிமைகள் மீதான கவலைக்குரிய விளைவுகளை நாங்கள் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது, மஹிந்த ராஜபக்ஷ மீன்பிடி அமைச்சராக இருந்தார். அவரை ஓரம்கட்டவே சந்திரிகா முயன்றுகொண்டிருந்தார். அந்தவேளையில், அவருக்கு பிரதமர் பதவி வழங்கவேண்டும் என்றும், அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவேண்டும் என்றும் முதன்முதலில் சந்திரிகாவுக்கு பகிரங்கமாக கடிதம் எழுதியவர் ஜனக பண்டார தென்னக்கோன்.

இந்தக் கடிதத்தைத் தொடர்ந்து சந்திரிகாவுக்கும் தென்னக்கோனுக்குமிடையே சில நாட்களாக கடிதப் போர் நடந்ததும் பழைய சங்கதிகள்.

சந்திரிகாவின் தந்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தபோது அவருடன் இருந்த ஒருசிலரில் மஹிந்தவின் தந்தையோடு மற்றுமொருவர் இந்த ஜனகவின் தந்தை ரிக்கிரி பண்டா தென்னக்கோன். ஐம்பத்தாறு முதல் எழுபத்தியேழு வரை தம்புள்ள தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவரின் புதல்வரான ஜனக பண்டார தென்னக்கோனும் தொடர்ந்து எம். பியாகவும் பல முக்கிய அமைச்சராகவும் பணியாற்றியவர்.

அவருக்கு நேர்ந்த நிர்க்கதி ஒன்று பற்றியே இப்போது தெற்கில் பரவலாக பேசப்படுகின்றது.

காலி முகத்திடல் மற்றும் 'மைனா கோ கம' வில் அலரி மாளிகைக்கு முன்பாக அப்பாவி ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டு அவர்களின் சொத்துக்கள் மற்றும் கட்டிடங்கள் சேதப்படுத்தப்பட்டதுடன், குறிப்பாக நாட்டின் பல பாகங்களிலும் ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தீயிட்டு அழிக்கப்பட்டன. அவ்வாறு எரிக்கப்பட்டவையில் இந்த ஜனக பண்டார தென்னகோனின் தம்புள்ளை இல்லமும் ஒன்று.

இருந்தபோதிலும், ஜனக பண்டாரவுக்கு மரத்தில் ஏறி வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதைபோன்று ஒரு சம்பவம் இடம்பெற்றது. சொந்த வீடு இல்லாத ஜனக, தான் அமைச்சராக இருந்தபோது வசித்த உத்தியோகபூர்வ வீட்டில் வசித்து வந்தார். அவர் அமைச்சர் பதவியை இழந்து இரண்டு வாரங்கள்கூட ஆகவில்லை. அதிகாரபூர்வ இல்லத்தை இழந்த அமைச்சருக்கு வேறு ஒரு வீடு கிடைக்கும்வரை அதிகாரபூர்வ இல்லத்தில் இரண்டு மூன்று மாதங்கள் வரை தங்கியிருக்கலாம்.

இவ்வேளையில், பிரதமர் பதவியை இழந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வீடு தேடிக்கொண்டிருந்தனர். முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு அரசு வீடு வழங்கவேண்டியது அவசியமானது.

அதற்காக ஏற்கனவே அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளில் பொருத்தமானதை வழங்குவதற்காக பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி ஆகியோர் தேடிக்கொண்டிருந்தனர்.

பல வீடுகளை பார்வையிட்ட பின்னர் ஜனக பண்டாரவின் அதிகாரபூர்வ இல்லத்துக்குள் சென்று பார்வையிட்டு, அந்த வீடு நல்ல நிலையில் உள்ளதால் மஹிந்த ராஜபக்ஷ வசிக்க ஏற்ற வீடு இது என தெரிவு செய்தனர்.

அந்த வீடு முன்னாள் பிரதமரின் வசிப்பிடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை ஜனக பண்டாரவிடம் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், அவரது உடமைகளை அகற்றுவதாக தெரிவித்திருந்தார். அவ்வாறு செய்ய வேண்டாம் என்றும், தனது வீடு தீயிட்டு நாசமாக்கப்பட்டுள்ளதால் தாம் வாழ்வதற்கு ஒரு வீடு கிடைக்கும் வரை ஓரிரு மாதங்கள் வீட்டில் இருக்க அனுமதிக்கவேண்டும் என்றும் ஜனக கேட்டுள்ளார்.

இவரின் இந்த வேண்டுகோளுக்கு இணங்காத மூத்த இராணுவ அதிகாரி ஒருவர், ஜனக பண்டார இல்லாத சமயம் பார்த்து அவரது வீட்டில் இருந்த பொருட்களை வெளியே இழுத்து, இராணுவ ட்ரக் வாகனங்களில் ஏற்றிக்கொண்டிருந்தார்.

வெளியே சென்றிருந்த முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார அதிகாரபூர்வ இல்ல வளாகத்திற்குள் வந்தபோது, வீட்டில் இருந்த தனது உடமைகளை இராணுவ ட்ரக் வாகனங்களில் ஏற்றிக்கொண்டிருப்பதைக் கண்டார். 'ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்? எனது வீடு எரிக்கப்பட்டுள்ளது. தற்போது எனது மனைவியின் சகோதரி வீட்டில் வசிக்கிறேன். எனக்கான ஒரு வீட்டை கண்டுபிடிக்கும் வரை எனக்கு சில நாட்கள் கால அவகாசம் கொடுங்கள்' என்று கேட்டும் பார்த்தார்.

ஆனால், இராணுவ அதிகாரிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காததால், அவர் தனது பொருட்களை தனது மனைவியின் சகோதரியின் வீட்டிற்கு எடுத்துச் சென்றார். இன்றும்கூட வீடு தேடிக்கொண்டிருக்கிறார் ஜனக பண்டார.

இந்த சம்பவத்தின் பின்னர் பாராளுமன்ற அமர்வில்கூட அவர் கலந்து கொள்ளவில்லை.

வீட்டில் இருந்த தளபாடங்கள் தூக்கி எறியப்பட்டு, தம்புள்ளையில் உள்ள தனது வீடு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தால் நொந்துபோயிருந்த ஜனகவுக்கு, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒருநாள் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடியிருக்கின்றார்.

தீ வைக்கப்பட்ட வீடு தொடர்பில் மட்டுமே மஹிந்த வினவியபோதும், தான் தங்கியிருந்த அதிகாரபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மஹிந்த ஒரு வார்த்தைகூட பேசவில்லையாம்.

தனக்கு வீடு தேவை என்பதற்காக ஜானக பண்டாரவை வலுக்கட்டாயமாக இராணுவத்தினர் வெளியேற்றிய சங்கதி மஹிந்தருக்கு தெரிந்திருக்குமோ தெரியவில்லை. என்னதான் இருந்தாலும், ஜனகவிற்கு ஏற்பட்ட நிலைமை இன்னுமொருவருக்கு ஏற்படக்கூடாது என்று மட்டுமே நினைக்கவைத்தது!

- ஊர்க்குருவி

## இந்தியப் பிரதமர் மோடிக்கு அவதூறு: மின்சார சபை தலைவர் மீது வழக்கு

### சஜித் பிரேமதாஸ அறிவிப்பு



கொழும்பு, ஜுன் 14

இலங்கை மின்சார சபைத் தலைவருக்கு எதிராக பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டொன்றை முன்வைக்கவுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபைத் தலைவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தொடர்பாக தெரிவித்த பொய் கருத்துக்கு எதிராகவே வழக்கு தொடுக்க இருப்பதாக சஜித் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரம் நடைபெற்ற கோப் குழு விசாரணை இடம்பெற்றுள்ளது.

வடக்கின் பூநகரி பிரதேசத்தில் காற்றாலை மின் உற்பத்திக்கான அனுமதியை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் மோடி அழுத்தம் கொடுப்பதாக ஜனாதிபதி தன்னிடம் தெரிவித்தார் என்று பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

பின்னர் தான் அவ்வாறு கூறியது தவறு, களைப்பு மற்றும் மனஅழுத்தம் காரணமாக தான் அவ்வாறான பொய்த் தகவல் ஒன்றை கூறியதாகவும் அவர் மனவருத்தம் தெரிவித்திருந்தார்.

எனினும் பாராளுமன்றக் குழுவொன்றின் முன்னால் பொய் உரைப்பது பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறும் பாரிய குற்றச் செயலாகும்.

அந்த வகையில் மின்சார சபைத் தலைவர் பெர்னாண்டோவுக்கு எதிராக பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் முறைப்பாடு செய்யவுள்ளோம்.

மின்சார சபைத் தலைவர் யாரோ ஒருவருடைய அழுத்தங்களுக்கு அடிபணிந்தே தனது முன்னைய கருத்தை வாபஸ் வாங்கிக் கொண்டுள்ளார்-என்றார். (அ)

## மூச்சுத்திணறி குழந்தை பலி!

கிளிநொச்சி, ஜுன் 14

முழங்காவிலில் 8 மாத கைக்குழந்தை உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர் குழந்தையை கதிரையில் இருத்தி விட்டு சமயலறையில் இருந்துள்ளனர். இந்த நிலையில், குழந்தை கதிரையிலிருந்து தவறி விழுந்துள்ளது.

குழந்தையை தூக்கிய தாயார் உடனடியாக பாலூட்டினார். இதன்போது குழந்தை மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. உடனடியாக குழந்தை, முழங்காவில் பிரதேச வைத்தியசாலைக்கு, கொண்டு செல்லப்பட்டபோது, வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## அரச ஊடகங்களுக்கு புதிய தலைவர்கள்!

கொழும்பு, ஜுன் 14

அரச ஊடக நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சில் வைத்து இந்த நியமனங்களை வழங்கினார்.

அதனடிப்படையில் ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தின் புதிய தலைவராக அசங்க பிரியநாத் ஜயசூரிய நிய மிக்கப்பட்டுள்ளார். அத்துடன், சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் தலைவராக பட்டய கணக்காளர் கனக அமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஹட்சன் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## இருவர் வெட்டிக் கொலை; சந்தேகநபர் ஒருவர் கைது!

மன்னார், ஜுன் 14

மன்னார் - நொச்சிக்குளத்தில் இரு சகோதரர்கள் வாளால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நொச்சிக்குளத்தில் இரண்டு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட வன்முறை வாள்வெட்டில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நொச்சிக்குளத்தைச் சேர்ந்த நபரொருவர் பொலிஸாரல் கைது செய்யப்பட்டார். இவர், நேற்று முன்தினம், மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ முன்பாக முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜுன் 14

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை புதன் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன், கடவைத்தரை ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோயிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சபா. சந்தனக்குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜுன் 14

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் செ.த. குமரன் "நாயன்மார் காட்டிய நன்நெறிகள்" என்னும் விடயப் பொருளில் ஆற்றுவார். (ஐ)

## பதுக்கிய அரிசி மீட்பு!

கொழும்பு, ஜுன் 14

மொனராகலை மற்றும் அனுராதபுரத்தில் இருந்து 4,000 கிலோகிராம் அரிசியை நுகர்வோர் அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

மொனராகலை பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2,575 கிலோகிராம் அரிசியும், அனுராதபுரத்தில் இருந்து 1,500 கிலோகிராம் அரிசியும் கைப்பற்றப்பட்டதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அரிசி பதுக்கி வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக அரிசியின் விலையேற்றம் காரணமாக, அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகளை அறிவிக்கும் வர்த்தமானியை அரசாங்கம் கடந்த வாரம் வெளியிட்டது.

சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி கையிருப்புகளை பறிமுதல் செய்வதற்காக நுகர்வோர் அதிகாரசபை கடந்த நாட்களில் சுமார் 70 சோதனைகளை நடத்தியது. (அ)

ஈழநாடு
Eelanadu
13.06.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இன்றைய நிலைக்கான மூல காரணம்?

நாடு வரலாறு காணாத நெருக்கடி ஒன்றை எதிர்கொண்டிருக்கின்ற நிலையில், இன்றைய நெருக்கடிக்கான மூலகாரணம் தொடர்பில் பலரும் அடி முடி தேட முற்சிக்கின்றனர். ஒவ்வொருவரும் தங்களின் கட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்களை கருத்தில்கொண்டு, அவ்வப்போது இது தொடர்பில் அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றனர். 1990களுக்கு பின்னர் இந்த நாட்டை ஆட்சிசெய்த, ஜனாதிபதிகள்தான், நாட்டின், இன்றைய நிலைக்கு காரணமென்று – ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர், ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருக்கின்றார். அவ்வாறாயின் அதற்கு முன்னர் கதிரையில் இருந்தவர்கள் காரணமில்லையா என்னும் கேள்வி எழுகின்றது. இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை நிர்ணயம் செய்தவர்களான டி. எஸ். சேனநாயக்கவும், எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கவும் இந்த நிலைமைக்கு காரணமில்லையா? சேனநாயக்கவின் வழிவந்தவர்களான, ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், ரணசிங்க பிரேமதாஸவும் காரணமில்லையா?

இந்த பின்னணியில் நோக்கினால், அண்மையில் பாட்டாலி சம்பிக்க ரணவக்க உண்மையை உரைத்திருந்தார். அவரும் கடந்தகாலத்தில், "ஜாதிக" சிந்தனையால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர்தான். ஆனால், இப்போது நிலைமைகளை உணர்ந்து உண்மைகளை உரைத்திருக்கின்றார். அதாவது, தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்காமையால், நாடு இவ்வாறானதொரு நிலைமைக்கு வந்திருக்கின்றதென்று, அவர் தெரிவித்திருந்தார். தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் – குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர் கதிரைகளை இலக்கு வைத்திருப்பவர்கள், விடயங்களை நேரடியாக சொல்வதற்கு தயக்கம் காட்டுகின்ற நிலைமையே காணப்படுகின்றது. இந்த பின்னணியில் சம்பிக்க இவ்வாறு வெளிப்படையாக பேசியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

ஆழமாக நோக்கினால், இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை சிக்கலானதாக மாறியதன் பின்னணியை, தீர்க்கப்படாமல் இழுபட்டுவந்த உள்நாட்டு பிரச்னையோடு இணைத்துத்தான் நோக்க வேண்டும். இதில் ஓர் அப்பட்டமான உண்மையுண்டு. அதாவது, இலங்கையை மாறி, மாறி ஆட்சிசெய்த ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் சரி, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு நியாயமான தீர்வை வழங்க முன்வரவில்லை. இரண்டு பிரதான கட்சிகளுமே, தமிழர் விடயத்தில் ஒரே மாதிரியான கொள்கையையே கடைப்பிடித்திருந்தன. தமிழர்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் பிரச்னைகளைத் தீர்கலாமென்றுதான் அனைவருமே சிந்தித்தனர்.

இத்தனைக்கும் வெளிவிவகார அணுகுமுறையில் சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும், பண்டாரநாயக்கவின் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் வேறுபட்ட பார்வைகளைக் கொண்டிந்தன. ஐக்கிய தேசியக் கட்சி, மேற்கு சார்பான வெளிவிவகார கொள்கையைக் கொண்டிருந்தது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, நடுநிலை வெளிவிவகாரக் கொள்கையை கொண்டிருந்தது. பண்டாரநாயக்கவின் வார்த்தையில் சொல்வதானால், நடுநிலை தத்துவம். அநுராதபுர ருவான் வெலிசாயவில், பதவிப் பிரமாணம் செய்துகொண்ட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், நடுநிலை வெளிவிவகார கொள்கை தொடர்பில்தான் பிரஸ்தாபித்திருந்தார். ஆனால், மறுபுறம் தமிழ் மக்களுக்கென்று, பிரத்தியேக பிரச்னைகள் இல்லையென்று வாதிட்டார். 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட நீக்குவதற்கு விருப்பம் கொண்டிருந்தார்.

செல்வநாயகம் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கைகளை மேற்கு சார்பான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை – மறுபுறும் நடுநிலை வெளிவிவகாரக் கொள்கையைக் கொண்டிருந்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தப் பின்புலத்தில்தான், இலங்கையின் உள்ளக அரசியலில், வெளித்தரப்புக்கள் தலையீடு செய்வதற்கான புறச்சூழல் உருவாகியது. இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது. நோர்வேயின் மத்தியஸ்தத்தின் மூலம், மேற்குலகின் தலையீடு நிகழ்ந்தது.

மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில், உள்நாட்டு யுத்தம் மோசமாக முடிக்கப்பட்டது. சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக ஒழுங்கு தொடர்பில் கேள்விகள் எழுந்தன. இன்றுவரையில் அது தொடர்கின்றது. ஹர்ஷ டி சில்வா போன்றவர்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாஸ போன்றவர்களை விமர்சிக்க பின்நிற்பதை, நாம் விளங்கிக் கொள்ளலாம். சஜித் தலைமையிலான கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால், எவ்வாறு சஜித் பிரேமதாஸவின் தந்தையின் அணுகுமுறைகளை தவறென்று கூறமுடியும், அந்தளவுக்கு இலங்கையின் அரசியல் இன்னும் வளர்ச்சியுறவில்லை. உள்நாட்டு பிரச்னைகளை தீர்த்துக் கொள்வதன் மூலம்தான், ஒரு நாடு உறுதியான வெளிவிவகாரக் கொள்கையைப் பாதுகாக்க முடியும். உள்நாட்டில் பிரச்னைளை தீர்க்க முடியாமல் இருக்கின்றபோது, வெளிநாட்டு அழுத்தங்கள் தவிர்க்க முடியாதவை. இந்த உண்மையை விளங்கிக் கொள்ளாத வரையில், இலங்கை ஒரு நாடாக முன்னோக்கி பயணிப்பது முடியாத காரியமாகவே இருக்கும்.

# ஜெனிவாவில் "இறுகப்போகும்" இலங்கை!

அலசுவது இராஜதந்திரி

இலங்கையின் தற்போதைய நெருக்கடி குறித்தும் அதன் காரணமாக சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஏற்படப் போகின்ற சர்வதேச அழுத்தம் குறித்தும் இரு அமெரிக்க முக்கியஸ்தர்கள் எச்சரித்துள்ளனர். அவர்களில் ஒருவர் அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார குழுத் தலைவர் ரொபட் மெனென்டஸ் மற்றையவர் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்.

இந்த இரு அமெரிக்க முக்கியஸ்தர்களினதும் எச்சரிக்கையை நோக்கும்போது சர்வதேச சமூகம் எவ்வளவு தூரம் இலங்கையை உற்று நோக்கி வருகின்றதென்பதையே அறிய முடிகின்றது.

இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் நிலவிய காலத்தில் இந்தக இரு மாகாணங்களிலும் நிலவிய மனித அவலம் இன்று முழு நாட்டிலுமே நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. எரிபொருளுக்காகவும், சமையல் எரிவாயுவுக்காகவும் வேறு அத்தியாவசிய பொருட்களுக்காகவும் மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதைக்காண முடியும். நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இந்த நிலைமை காணப்படுகின்றது.

அரசியல் கராணங்களாலும் யுத்த நிலவரங்கள் காரணமாகவும் மட்டுமல்ல. பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மனித அவலங்கள் ஏற்படுகின்றன. இலங்கையில் மூன்று தசாப்தகால யுத்தம் ஏற்படுத்திய அவலங்கள் அதன் காரணமாக முனைப்படைத்திருந்த அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் என்பவை குறித்து ஜெனிவா மனித உரிமை பேரவையில் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

ஆனால், தற்போது இலங்கையில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் பிச்னைகள் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்தோ அல்லது மனித உரிமைகள் நிலவரம் குறித்தோ அரச தரப்பிலிருந்து காத்திரமான நடவடிக்கைகள் இதுவரை எடுப்கப்படாதுள்ள நிலையில் எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைமீது அழுத்தங்கள் அதிகரிப்பதற்கான சூழல் வலுப்பெறும் என்று இலங்கையிலுள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை ஓர் எச்சரிக்கையாகவும் கொள்ள முடியும். ஏனெனில், வடக்கு - கிழக்கு மகாகாணங்களில் யுத்தம் காரணமாக அடிப்படை மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டிருந்தன. அப்போதெல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் இன ரீதியான கோஷங்களை முன்வைத்து யுத்தத்தை முன்னெடுத்து அப்பாவி சிங்கள இளைஞர்களையும் அந்த யுத்தத்துக்கு ஆட்சியிலிருந்தோர் பலிக்கடாக்களாகியிருந்தனர். தென்னிலங்கையில் இனவாதம் எவ்வளவு தூரம் முன்னெடுக்கப்பட்டிருந்ததென்பதை காலிமுகத்திடலில் அமைந்துள்ள "கோட்டா கோ கம" ஆர்ப்பாட்டக்கார்களும் அவ்வப்போது குறிப்பிட்டு வருகின்றனர்.


பதின் மூன்று இந்தோ - பசுபிக் நாடுகளை உள்ளடக்கிய அமைப்பாக இருப்பது "குவாட்". இந்த அமைப்பிலுள்ள வெளியுறவு பிரதிநிதிகளிடம் இலங்கையின் தற்போதைய நிலவரம் பற்றி எடுத்துக்கூறியபோதே அமெரிக்க செனட் சபை வெளிவிவகார குழு தலைவரான ரொபட் மெனென்டஸ் இலங்கை மனிதாபிமான பேரழிவின் விளிம்பில் இருப்பதாகக் கூறியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நிதி மோசடிகள் இடம் பெற்றன என்றும் அமெரிக்க செனட்டர் ரொபட் மெனென்டஸ் கூறியிருப்பதோடு தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை ஏற்கனவே சீனா உட்பட பல நாடுகளிடம் பெற்றுக்கொண்ட கடனை திருப்பிச்செலுத்துவதில் பாரிய சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளார். இதன் காரணமாகவே இலங்கை பெரும் சிக்கல்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இலங்கையின் இன்றைய நிலவரம் குறித்து சில சிவில் சமூக பிரதிநிதிகளிடம் கருத்து வெளியிட்டபோது, இலங்கையில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமைக்ள மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அதன் அடுத்த கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பரில் இடம் பெறும்போது நிச்சயமாக கவனத்தில் கொள்ளும் என்று தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பேரவை தீர்மானங்கள் தொடர்பாக இலங்கை இதுவரை எவ்வித கரிசனையையும் காண்பிக்கவில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்க செனட்டர் மெனென்டஸ் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோர் குறிப்பிடுள்ளவற்றை நோக்கும்போது ஜெனிவாவில் இலங்கை மீதான அழுத்தம் நன்கு இறுகப்போவதையே அறிந்து கொள்ள முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



ஜூன் - 14 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 31
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பௌர்ணமி




**மேடம்**
நீங்கள் மேற்கொள்ளும் செயலில் தடை ஏற்பட்டு பின்னர் நிறைவேறும்.பணியிடத்தில் நற்பெயர் எடுப்பீர்கள். புதிய முயற்சிகளில் நீங்கள் எதிர்பார்த்த நன்மை சற்று தாமதமாக கிடைக்கும்.

**இடபம்**
உங்களுடைய குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலில் இருந்த மந்த நிலை நீங்கும். விறுவிறுப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்**
பெரியோரின் ஆதரவால் உங்களுடைய செல்வாக்கு உயரும். விரைவாக செயல்பட்டு ஒரு நற்செயலை செய்து முடிப்பீர்கள். உங்களுடைய ஆலோசனைக்கு பணியிடத்தில் நல்ல மதிப்பு உண்டாகும்.

**கடகம்**
நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று வந்து சேரும். நீங்கள் நினைத்த செயலை இன்று நிறைவேற்றுவீர்கள். உங்களை விட்டு விலகி இருந்த உறவினர் திரும்ப வந்து இணைவார்கள்.

**சிம்மம்**
தாய்வழி உறவுகளால் சங்கடங்கள் தோன்றி மறையும். அமைதி தேவை.உத்தியோகத்தில் சிறுசிறு சங்கடங்கள் தோன்றும். எச்சரிக்கை அவசியம். பழைய கடன் சங்கடப்படுத்தும்.

**கன்னி**
உங்களுடைய செயல் எளிதில் நிறைவேறும். புதிய பொருள் சேர்க்கை உண்டு.வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு உதவி செய்வீர்கள்.குடும்பத்தினருடன் விருந்திற்கு செல்வீர்கள்.

**துலாம்**
தம்பதியர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து செயல்படுவீர்கள்.புதிய வேலைக்கு முயற்சிப்பீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தன்னம்பிக்கையால் நினைத்த செயலில் வெற்றி அடைவீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் நினைப்பிற்கு மாறாக குடும்பத்தில் சில செயல்கள் நடைபெறும். ஒரு சிலருக்கு பணியாளர்களுடன் பிரச்னை உண்டாகும். அவசர வேலைக்கு அடுத்தவர்களின் உதவியை எதிர்பார்ப்பீர்கள்.

**தனுசு**
சிக்கனத்தைக் கடை பிடியுங்கள்.மற்றவர்களை அனுசரித்து செல்வதால் முயற்சி வெற்றி பெறும். எதிர்பாராத பயணத்தால் அலைச்சல் உண்டாகும்.இருப்பினும் நன்மை உண்டாகும்.

**மகரம்**
உங்களுடைய எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.எதிர்பாராத பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.குடும்பத்தினரின் விருப்பங்களை இன்று நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.பணியிடத்தில் உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் உண்டாகும். நினைத்தது நிறைவேறும்.

**மீனம்**
குடும்பத்தில் அமைதி கிடைக்கும்.உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும். புதிய நட்பினால் எண்ணம் நிறைவேறும். நீங்கள் மேற்கொண்ட செயலில் வெற்றி உண்டாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

# தமிழகத்தில் மீன்பிடி தடை; இன்றுடன் நிறைவடைகிறது

இராமேஸ்வரம், ஜூன் 14

தமிழகத்தில் விதிக்கப்பட்டிருந்த மீன் பிடி தடைக்காலம் இன்றுடன் நிறைவுக்கு வருகிறது. நாளை புதன்கிழமை முதல் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா, பாக்கு நீரிணை கடல் பகுதிகளில் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களை மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகளின் இனப்பெருக்கக் காலமாக, மத்திய மீன்வளத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

மீன்வளத்தைப் பெருக்கும் நோக்கத்தில், இந்தக் காலகட்டத்தில் விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்படும். தமிழகத்தில் இந்த ஆண்டுக்கான மீன்பிடித் தடைக்காலம் ஏப். 15 முதல் ஜூன் 14 வரை 61 நாட்களுக்கு தடை விதிக்கப்பட்டது. இதன்படி, 14 கடற்கரை மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் விசைப்படகுகள் கடலுக்குச் செல்லவில்லை.

இந்தத் தடைக்காலத்தில் மீனவர்கள் படகுகளில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், மீன்பிடித் தடைக்காலம் இன்றுடன் நிறைவடைகிறது. புதிய மீன்பிடிக் காலம் நாளை தொடங்குகிறது. இதற்காக மீனவர்கள் கடலுக்குச் செல்ல தயாராகி வருகின்றனர்.

இது தொடர்பாக மீன்வளத் துறை அதிகாரிகள் கூறும்போது, "மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டியோ, அரசால் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தியோ மீன் பிடிக்கக்கூடாது. உரிய ஆவணங்களுடனும், பாதுகாப்பு உபகரணங்களுடனும் மீன்பிடிக்க வேண்டும். குறிப்பிட்ட கடல் எல்லைப் பகுதி களை தாண்டி மீன்பிடிக்கக் கூடாது" என்றனர். (ஐ)

# அ. தி. மு. க. - தி. மு. க. கட்சிகளின் ஆட்சிகளில் வித்தியாசம் இல்லை

## அன்புமணி குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 14



அ. தி. மு. கவின் ஆட்சிக்கும் தற்போது நடக்கும் தி. மு. கவின் ஆட்சிக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை என்று கூறியுள்ளார் பா. ம. கவின் தலைவர் அன்புமணி ராமதாஸ் எம். பி. நேற்று செய்தியாளர்களை சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது? என்பது பற்றி பா.ம.க. உயர் மட்டக்குழு கூடி முடிவு செய்யும். காவிரி மேலாண்மை வாரிய கூட்டம் வருகிற 17ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டு வது தொடர்பான திட்ட அறிக்கையை விவா திக்க திட்டமிட்டிருக்கிறார்கள்.

மேலாண்மை வாரியம் என்பது நீரை பகிர்ந்து கொள்வதற்கு அமைக்கப்பட்ட வாரியம். எனவே, இதில் அணை கட்டுவது தொடர்பாக விவாதிக்க அனுமதிக்ககூடாது. இதனை தடுத்து நிறுத்த தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர வேண்டும்.

தமிழகத்தில் மது போதை அதிகரித்துள்ளது. தமிழக அரசின் ஓராண்டு கால ஆட்சியில் பத்து மாதம் கொரோனா வைரஸில் முடிந்துவிட்டது. தனியார் நிறுவனங்களில் 80 சதவீத பணிகள் தமிழில் படித்தவர்களுக்கு வழங்கப்படும் என தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொன்னது. ஆனால் இதுவரை நிறைவேற்றவில்லை.

இது போன்று பல தேர்தல் அறிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அ. தி. மு. க. ஆட்சிக்கும், தற்போதைய தி. மு. க. ஆட்சிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. தலைவர்கள் மட்டுமே வேறு வேறு. தமிழகத்தில் மக்கள் பிரச்னைகளுக்காக போராடி பல வெற்றிகளை பா.ம.க. தேடித்தந்துள்ளது - என்றார். (ஐ)

# தமிழக ஆளுநர் ரவியை பதவி நீக்க வேண்டும்!

## வைகோ வலியுறுத்து



சென்னை, ஜூன் 14

இந்தியாவை வழி நடத்துவது சனாதன தர்மம் அல்ல. அம்பேத்கர் வடித்த அரசியலமைப்பு சட்டமே. எனவே, தவறாகப் பேசிய ஆளுநரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ம. தி. மு. கவின் பொதுச் செயலாளர் வைகோ.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஆளுநர் பொறுப்பு வகிக்கும் ஒரு நபர் அரசியலமைப்புச் சட்ட நெறிகளை மீறி, சனாதன தர்மம் இந்தியாவை வழி நடத்துகிறது என்று பேசி இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

இந்தியாவை வழி நடத்துவது அண்ணல் அம்பேத்கர் வடித்தெடுத்த அரசியல் அமைப்பு சட்டமே தவிர, நால் வர்ண பேதத்தை வலியுறுத்தும் சனாதன தர்மம் அல்ல. ஆளுநர் ரவி தனது பொறுப்பை உணர்ந்து பேச வேண்டும்.

உடனடியாக குடியரசு தலைவர் தமிழக ஆளுநரை அந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# அ.தி.மு.கவின் தலைமை குழு இன்று சென்னையில் கூடுகிறது

சென்னை, ஜூன் 14

அ. தி. மு. கவின் செயல்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் தொடர்பாக வரும் இன்று செவ்வாய்க்கிழமை தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் ஆலோச னைக் கூட்டம் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கி ணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக ஓ. பி. எஸ்., இ. பி. எஸ். வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், அ. தி. மு. க. செயல்குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, சென்னையில் நடைபெறவுள்ளது.

கட்சியின் செயல்குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக் கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணியளவில் சென்னை யில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகளும், மாவட்ட செயலாளர் களும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்" என்றுள்ளது. (ஐ)



# இராசதானியம் திட்டம் சங்கானையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சங்கானையில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த்தேசியப்பசுமை இயக்கம் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் என்று கருப்பொருளில் இராசதானியம் என்ற திட்டத்தை விவசாயக் கிராமங்களில் முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே இத்திட்டத்துக்கான விதைகள் வழங்கும் நிகழ்ச்சி சங்கானை மடத்தடியில் இடம்பெற்றது.

மடத்தடி வரசித்தி விநாயகர் ஆலய முன்றலில் தி.சத்தியேந்திராவின் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் இராசதானியத் திட்டம் தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

ஓய்வுநிலைப் பிரதி விவசாயப்பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் சிறுதானியங்களின் செய்கை முறைபற்றிய வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இதன்போது ஐம்பது விவசாயிகளுக்குக் குரக்கன், காராமணி (கௌபி), பயறு விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. இலவசமாக வழங்கப்பட்ட விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகள் சுழற்சி முறையில் ஏனைய விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டுத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் கையளிக்க வேண்டும் என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இவ்விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாடு எதிர்நோக்கியுள்ள உணவுப் பஞ்சத்துக்கு முகங்கொடுக்கும் விதமாக அதிக நீரும், அதிக உரங்களும் தேவைப்படாத குறுகிய காலப்பயிர்களான சிறுதானியங்கள் மற்றும் அவரையினப் பயிர்களை உற்பத்தி செய்வதில் விவசாயிகள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உங்கள் பிழையான புரிதலால் எனது உயிருக்கு அச்சுறுத்தல்!

## பிரதமர் ரணிலுக்கு சாணக்கியன் கடிதம்

கொழும்பு, ஜுன். 14

**தனது பாராளுமன்ற உரை தொடர்பான பிழையான புரிதல் காரணமாக தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கடந்த மே மாதம் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை மீளப்பெறவேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்டிருந்தார்.

20ஆவது அரசியமைப்புத் திருத்தம் உட்பட நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தமை காரணமாகவே பலரின் வீடுகள் எரியூட்டப்பட்டதாக சாணக்கியன் வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல. இந்தக் கருத்தின் மூலம் சாணக்கியன் நடந்த வன்முறைகளை ஏற்றுக்கொள்கின்றாரா? மரணத்தை ஏற்றுக்கொள்கின்றாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையில், இது குறித்து தெளிவுபடுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

கடந்த மே மாதம் 20ஆம் திகதி, எனது சமீபத்திய பாராளுமன்ற உரை குறித்த ஒரு தெளிவுபடுத்துதலின் கட்டாயம் எனக்குள்ளது.

மே 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் குறைகள், தேவைகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக உணர்ந்ததால்தான், மக்கள் வன்முறையான முறையில் எதிர்வினையாற்றினார்கள் என்று உரைத்திருந்தேன்.

தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்கு வாக்களித்த மக்களின் நலனைப் பாதுகாப்பதில் தங்கள் கட்டாயக் கடமைகளில் இருந்து தவறிவிட்டதாக அவர்கள் ஒருவேளை உணர்ந்திருக்கலாம். என்னுடைய இந்தக் கூற்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுள்ளது.

எனவே, இதன் காரணமாகவே அவர்களுக்கு எனது நிலைப்பாட்டை விளக்குவது எனது தார்மீகக் கடமை என்று உணர்கின்றேன்.

அந்தவகையில், எனது அறிக்கைகளின் உண்மைத்தன்மையை பிரதமர் சரிபார்த்து, இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியும், இது போன்ற ஒரு மிகத் தீவிரமான அறிக்கை, அது நாட்டின் பிரதமரிடமிருந்தும், குறிப்பாக உங்களைப் போன்ற அந்தஸ் துள்ள ஒருவரிடமிருந்தும் வெளிப்படும்போது, பொது மக்கள் அதை சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை என்று கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள முடியும். இது எனது நற்பெயருக்கு ஈடுசெய்ய முடியாத களங்கத்தை ஏற்படுத்தும் அதே வேளையில் எனது உயிருக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இந்நாட்டு மக்களுக்கு ஆறுதல் அளிக்கும், அவர்களுக்கு உடனடி மற்றும் நிலையான நிவாரணம் அளிக்கும், அவர்களின் தற்போதைய குறைகள் மற்றும் எதிர்கால நல்வாழ்வுக்காக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் நான் என்றும் ஆதரிப்பேன்-என்றுள்ளது. (அ)

# அரிய வகை நட்சத்திர ஆமை கிளிநொச்சியில் நேற்று மீட்பு!



கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சியில் அரிய வகை நட்சத்திர ஆமை மீட்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் விவசாயி ஒருவர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது குறித்த ஆமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்த ஆமை பிரதேசத்தில் காணப்படும் ஆமை இனங்களிடமிருந்து வேறுபட்டமையால் அது தொடர்பில் இணையத்தளத்தில் தேடியுள்ளனர்.

அந்த ஆமையானது அருகிவரும் நட்சத்திர ஆமை வகையை சேர்ந்தது என அவர்கள் அடையாளம் கண்டதை அடுத்து அதனைப் பாதுகாக்கும் நோக்குடன் வன ஜீவராசிகள் திணைக்களத்தினரை அழைத்து அவர்களிடம் ஆமையை பாதுகாப்பாக கையளித்துள்ளனர்.

அந்த ஆமையை கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டதுடன், ஆமையைப் பாதுகாப்பாக பெற்று சென்றுள்ளனர்.

இந்த ஆமை இனம் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு உரித்துடையது எனவும், கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படும் அரிய வகையான ஆமை இனம் எனவும் தெரியவருகின்றது. (அ)

# இலங்கைக்கு நன்கொடையாக 50 000 அமெ. டொலர் கிடைத்தது

## மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

இலங்கை,. நலன் விரும்பிகளிடமிருந்து சுமார் 50,000 அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அண்மைய புள்ளிவிவரங்களின்படி, 51,988 அமெரிக்க டொலர்கள், 14,508 ஸ்டெர்லிங் பவுண்ட்கள், 4253 யூரோக்கள் மற்றும் 11,646 அவுஸ்திரேலிய டொலர்களை நலன் விரும்பிகளிடமிருந்து பெற்றுள்ளது.

அதற்கமைய, இவ்வாறு வழங்கப்படும் அனைத்து வெளிநாட்டு நாணய நன்கொடைகளும் மருந்து, எரிபொருள் மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என மத்திய வங்கி உறுதியளித்துள்ளது. (அ)

# மதுரங்குளியில் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூன் 14

புத்தளம் - மதுரங்குளி பகுதியில் எரிபொருள் வரிசைக்கு அருகில் உள்ள ஓடையில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அந்தப் பகுதியில் உள்ள பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவர் எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் என தெரிவிக்கப்ப டுகின்றபோதிலும், அது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தந்தையைக் கட்டையால் அடித்துக் கொன்ற மகன்!

கொழும்பு, ஜூன் 14

மகன் ஒருவர் தனது தந்தையைக் கட்டையால் அடித்துப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் குருவிட்ட பொலிஸ் பிரிவுட்குட்பட்ட பொஹரபாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் 66 வயதுடைய பரகடுவ, பொஹொர பாவ பகுதியைச் சேர்ந்தவராவார்.

குடிபோதையில் வந்த மகன் அவரது மனைவியைத் தாக்கியுள்ளார். இதன்போது மருமகளைக் காப்பாற்ற முற்பட்ட தனது தந்தையைக் கட்டையால் அடித்து மகன் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய 34 வயதுடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இலங்கை மின்சாரசபை தலைவர் இராஜினாமா!

## புதிய தலைவராக இலங்கக்கோன்



**கொழும்பு, ஜுன் 14**
**இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்டினாண்டோ தனது இராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளார்.**

இந்நிலையில் அவர் சமர்ப்பித்த இராஜினாமாவை ஏற்றுக் கொண்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை மின்சார சபையின் புதிய தலைவராக நலிந்த இலங்கக்கோன் நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

எரிசக்தி முதலீட்டுத் திட்டங்களை அதானி குழுமத்துக்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியதாக ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்தார் என இவர் முன்னர் கூறியிருந்தார்.

இருப்பினும் காற்றாலை மின் திட்டத்தை வழங்குவது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்த கருத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மன்னார் பொது வைத்தியசாலை நோயாளர் விடுதியில் கத்திக்குத்து

## ஒருவர் பொலிஸாரால் கைது

மன்னார், ஜுன் 14
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் மீது இவ்வாறு கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அதிக விலைக்கு அரிசி விற்றால் 5 இலட்சம் ரூபா வரை அபராதம்

கொழும்பு, ஜுன் 14
அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக ஒரு இலட்சம் ரூபா முதல் 05 இலட்சம் ரூபா வரை அபராதம் விதிப்பதற்கான இயலுமை உள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேபோன்று குறித்த வியாபாரிக்கு எதிராக 06 மாத சிறைத் தண்டனையை விதிப்பதற்கான இயலுமையும் உள்ளதென நுகர்வோர் விவகார மற்றும் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் மற்றும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிரான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# லிட்ரோ நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்

கொழும்பு, ஜுன் 14
லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவராக முதித பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக செயற்பட்ட விஜித ஹேரத் தாம் பதவியில் இருந்து விலகுவதாக கடந்த 10 ஆம் திகதி முதல் அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவராக முதித பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (அ)

# பாவனையாளர் அதிகார சபையால் அரிசி ஆலைகளில் திடீர் சோதனை!



கிளிநொச்சி, ஜுன் 14
கிளிநொச்சி மாவட்டத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் அரிசி ஆலைகள் மற்றும் அரிசி விற்பனை நிலையங்களில் தொடர்பில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்ட இச்சோதனை நடவடிக்கையின்போது கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலையை பொறித்த அல்லது காட்சிப்படுத்திய அரிசி ஆலை உரிமையாளர் மற்றும் கூடிய விலையில் அரிசியை விற்பனை செய்த விற்பனையாளர்களுக்கு எதிராகவும் விலை காட்சிப்படுத்தாது அரிசி விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்வரும் நாட்களிலும் அரிசி விற்பனை விலை தொடர்பான திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு முறைகேடுகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, அதிகளவான நெல்லினை இருப்பில் வைத்துள்ளபோதிலும் அதனை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகம் செய்ய மறுக்கும் பதுக்கல் நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுமக்கள் அரிசி கொள்வனவின்போது விலை தொடர்பில் அவதானம் செலுத்துவதுடன், முறைகேடான வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யுமாறும் அல்லது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை துரித சேவை இலக்கமான 1977 ஊடாகவும் முறைப்பாடுகளை வழங்க முடி யும் பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபையினர் தெரி வித்துள்ளனர். (அ)

# எரிபொருளுக்காக காத்திருப்போரை இலக்கு வைத்து இடம்பெறும் மோசடி

கொழும்பு, ஜுன் 14
எரிபொருள் தட்டுப்பாடுக்கு மத்தியில், வரிசையில் காத்திருப்போரை இலக்கு வைத்து சிலர் மோசடியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாம் எரிபொருளை பெற்றுத்தருவதாக கூறி வரிசையில் காத்திருப்பவர்களிடம் பணத்தைப் பெற்றுச் சிலர் மோசடியில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகின்றது.

எனவே, குறித்த வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்குமாறும், அவர்கள் குறித்த தகவல்கள் அறிந்திருப் பின் தமக்கு அறியப்படுத்து மாறும் பொலிஸார் குறிப் பிட்டனர்.

மகரகம பகுதியில் இடம்பெற்ற இவ்வாறான மோசடி சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# எரிவாயு தட்டுப்பாடு காரணமாக 80 வீத சிற்றூண்டிச்சாலை பூட்டு!

கொழும்பு, ஜுன் 14
நாட்டில் நிலவிவரும் எரிவாயு தட்டுப்பாடுக் காரணமாக புறக்கோட்டை உள்ளிட்ட பல நகரங்களில் உள்ள 80 வீதமான சிற்றூண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய சுயத் தொழில் வர்த்தக சங்கம், சிறிய மற்றும் நடுத்தர சிற்றுண்டிச் சாலைகளின் உரிமையாளர்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது எரிவாயு கிடைக்காத காரணத்தினால் பலர் தங்களின் தொழிலை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அவர்களது குடும்பத்தினர் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்

கொழும்பு, ஜுன் 14
இந்த ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளுடன் தொடர்புடைய வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை 12 ஆம் திகதி வரை பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் என ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் மற்றும் வாக்காளர் பட்டியலுக்கு சேர்க்கப்படும் பெயர் பட்டியல் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படும்.

இந்த காலப்பகுதியில் கோரிக்கைகள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# ரூபாயின் பெறுமதி 44.3 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன். 14

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 44.3 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்தோடு யூரோக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 40.7 சதவிகிதமும் ஸ்ரேலிங் பவுண்ஸூக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 39.8 சதவிகிதமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் ஜப்பானிய யெனுக்கு எதிராக 35.1 சதவிகிதமும் அவுஸ்ரேலிய டொலருக்கு எதிராக 43.1 சதவிகிதமும் வீழ்ச்சி கண்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி இந்திய ரூபாய்க்கு எதிராக நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 41.7 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த மே மாதம் 13ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட அந்நிய செலாவணி ஸ்திரப்படுத்தல் கொள்கை காரணமாக ரூபாயின் பெறுமதி சற்று ஸ்திரத்தன்மையை பெற்றுள்ளதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பாடசாலை மதியநேர உணவுக்கான 5 மாத நிதியை அரசு வழங்கவில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன். 14

**அரசாங்கம் ஆரம்பப் பாடசாலைக்கு வழங்கிய மதியநேர உணவுக்கான நிதியை கடந்த 5 மாதங்களுக்கு மேலாக வழங்காத நிலையில் அந்த நிதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அதிபர்கள் கடைகளில் கடன்களைப் பெற்றிருந்தபோதும் இதுவரை அந்த நிதி வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன்திலீசன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்வி அமைச்சு உத்தியோக பூர்வமாக மதிய நேர உணவை நிறுத்துமாறு அறிவிக்காத நிலையில் நிதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஐந்து ஆறு மாதங்களுக்கு மேலாக கடைகளிலே கடன்களைப் பெற்று உணவுகளை மாணவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். இதனால் அதிபர்கள் பல லட்சங்களை கடனாக பெற்று தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

வெளி மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மனஅழுத்தங்களுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் உட்படுகின்றனர். பாடசாலையில் வழங்கும் சாப்பாட்டை நம்பி வரும் மாணவர்கள் ஏராளமாக உள்ளனர். கிராமப் புறங்களில் இந்த நிலைமை அதிகமாக காணப்படுகின்றது.


பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழலில் உணவைப் பெறக்கூட வழியில்லாத நிலையில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் வறிய மாணவர்கள், துரதிர்ஷ்டவசமாக தங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக உழைக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

எரிபொருட்களை வரிசைகளில் நின்று பெறவேண்டிய நிலை காணப்படுகிறது. வரிசைகளில் நின்றாலும் எரிபொருள் கிடைக்குமா என்பது சந்தேகமே. வெளி மாவட்டங்களில் வேலை செய்யும் ஆசிரியர்கள் மூன்றில் இரண்டு பங்கை எரிபொருளுக்கும் உணவுத் தேவைக்கும் செலவிடுகின்றனர்.

தற்போதைய நெருக்கடியிலும் பாடசாலைக்கு விரல் அடையாள நடைமுறையை பின்பற்றிவருகின்றனர். இதனால் ஆசிரியர்களின் விடுமுறைகள் இழக்கப்படுகிறது. அரசாங்கம் விடுகின்ற தவறுகளுக்கு ஆசிரியர்களும் அதிபர்களும் பலிக்கடாவாக்கப்படுகின்றனர். அரசாங்கம் எரிபொருள் விடயத்துக்கு சரியான தீர்வை வழங்காமல் சமையல் எரிவாயு சிலிண்டர் விடயத்துக்கு சரியான தீர்வை வழங்காமல் ஆசிரியர்கள் நேரத்துக்கு வரவேண்டும் எனக் கோருவதை ஏற்கமுடியாது-என்றார். (அ-03)

# பஸிலை சிறையில் அடைக்கவேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை



கொழும்பு, ஜூன். 14

முன்னாள் நிதிய மைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு இழைத்த குற்றத்துக்காக அவரை சிறையில் அடைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பஸில் இன்று வீட்டுக்குச் சென்றுவிட்டார். அவருக்கு இப்போது எந்தப் பொறுப்பும் இல்லை. குடும்ப அரசியலை வழிநடத்தியவர்தற்போது வீட்டுக்கு திரும்பியுள்ளார். அவரால் நாட்டு மக்கள் அப்படியொரு கதியை அனுபவித்த போது, ஒரு மனிதன்வேறு நாட்டுக்குச் செல்ல முடியுமா? செய்த குற்றத்துக்காக முன்னாள் நிதிய மைச்சர் சிறைக்கு செல்ல வேண்டும்-என்றார்.(அ)

# ரூ.100 மில்லியன் நட்டத்தில் மத்தள விமான நிலையம்!

கொழும்பு, ஜூன். 14

மத்தள விமான நிலையம் தற்போது மாதாந்தம் 100 மில்லியன் ரூபாய் நட்டத்தில் இயங்கி வருவதாக விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவசரமாக தரையிறங்குவதற்கான மேலதிக விமான நிலையமாக மத்தள விமான நிலையத்தை தொடர்ந்து இயக்கவேண்டும் என கூறினார்.

விமான நிலையம் மூடப்பட்டால் விமானங்கள் சென்னைக்கு திருப்பி விடப்படவேண்டும் என்பதனால் நட்டம் ஏற்பட்டாலும் பராமரிக்கவேண்டிய நிலையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

காட்டு யானைகள் வாழுமிடத்துக்குள் விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையால் மின்சார வேலியை உடைத்துக் கொண்டு காட்டு யானைகள் நுழையும் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

காட்டு யானை அச்சுறுத்தலுக்கு தீர்வாக மின்சார வேலிக்கும் விமான நிலைய வளாகத்துக்கும் இடைப்பட்ட வெற்று நிலங்களில் பனை மரங்களை வளர்க்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (அ)

# நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்கு இவ்வருட இறுதிவரை காத்திருக்கவேண்டும்

## கூறுகிறார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஜூன். 14

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்கு இலங்கை இந்த வருட இறுதி வரை காத்திருக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெற இந்த ஆண்டு இறுதி வரை காத்திருக்க வேண்டும், அதற்கு முன் நாங்கள் எந்தப் பணத்தையும் பெற முடியாது என அவர் கூறினார்.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடு இலகுவானதல்ல என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# சீன - அமெரிக்க தூதுவர்கள் கொழும்பில் சந்தித்து பேச்சு!

கொழும்பு, ஜூன். 14

இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென்ஹொங் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

சீனத் தூதரகத்தில் நட்பு ரீதியாக இச்சந்திப்பு இடம்பெற்றதாகவும் பரஸ்பரம் ஆர்முள்ள விடயங்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடியதாகவும் இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் இலங்கைக்கு சீனாவும் அமெரிக்காவும் இணைந்து உதவலாம் என இந்தச் சந்திப்பு குறித்து சீனத் தூதரகம் வெளியிட்ட ருவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# தனது நிலுவை வேதனம் முழுவதையும் சுகாதார அமைச்சுக்கு கொடுத்த ஷாபி!

கொழும்பு, ஜூன். 14

குருநாகல் போதனா வைத்திய சாலையின் மகப்பேறு மற்றும் பெண் நோயியல் பிரிவின் விசேட வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன், நாட்டுக்கு தேவையான மருந்து களை கொள்வனவு செய்வதற்காக தனது நிலுவை வேதனம் முழுவதையும் சுகாதார அமைச்சுக்கு திருப்பிக் கொடுத்துள்ளார்.

வைத்தியர் ஷாபி பணி இடை நிறுத்தப்பட்ட காலப்பகுதிக்குரிய, நிலுவை வேதனம் மற்றும் கொடுப்பனவுகளை ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னர் மீளச் செலுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் சுகாதார அமைச்சுக்கு உத்தரவிட்டது.

அதன்படி, அவருக்கு வழங்கப் பட வேண்டிய சம்பள நிலுவை மற்றும் கொடுப்பனவுகளாக 26 இலட்சத்து 75 ஆயிரத்து 816 ரூபா 48 சதத்தை (2,675,816.48) வழங்க சுகாதார அமைச்சு நடவ டிக்கை எடுத்தது.

அதற்கான காசோலையை வைத்தியர் ஷாபி பெற்றுக்கொண் டதுடன், நிலுவையில் உள்ள சம்பளம் மற்றும் கொடுப்பனவு களை சுகாதார அமைச்சிடம் திருப்பி வழங்க முடிவு செய்துள்ளார்.

தற்போது நாட்டில் கடும் நெருக்கடியில் உள்ள மருந்துகளை வாங்குவதற்கு தேவையான பண மாக தமது சம்பள நிலுவையை சேர்த்துக் கொள்ளுமாறு கோரி வழங்கியுள்ளார்.

பெருமளவிலான பெண்க ளுக்கு தெரியாமல் கட்டாய கருத் தடை செய்யப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட விசேட வைத்தியர் வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீனை மீள அழைக்கத் தீர்மானிக்கப்பட்டது. நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்கில் அவர் குற்ற மற்றவர் என தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றம் இந்த முடிவை எடுத்தது.

அதன்படி, அந்தக் காலகட்டத்தில் அவருக்கு வழங்கப்படாத சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகள் அனைத்தையும் வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவுடன் சேர்ந்து பணியாற்ற விரும்பும் சீனா

மீரா சிறினிவாசன்

இலங்கைக்கு ஆதரவளிப்பதில் இந்தியாவின் “பெரிய முயற்சிகளை” மதித்திருக்கும் சீனா மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை விடுபடுவதற்கு உதவ இந்தியாவுடனும் சர்வதேச சமூகத்துடனும் இணைந்து பணியாற்ற முன்வந்திருக்கிறது.



தலைநகர் பெய்ஜிங்கில் கடந்த வாரம் செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஷாவோ லிஜியான், சீன அரசாங்கத்தினால் அண்மையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட 50 கோடி யுவான் ( சுமார் 7கோடி 30 இலட்சம் அமெரிக்க டொலர்கள்) பெறுமதியான மனிதாபிமான உதவிகள் குறித்து விளக்கமளித்தார்.

“இலங்கைக்கு உதவி வழங்கும் விடயத்தில் இந்தியா மேற்கொண்ட பெரிய முயற்சிகளை நாமும் அவதானித்திருக்கிறோம். அதை நாம் மதிக்கிறோம். இலங்கைக்கும் அதைப் போன்று நெருக்கடிகளை எதிர்நோக்குகின்ற வளர்முக நாடுகளுக்கும் உதவுவதில் இந்தியாவுடனும் சர்வதேச சமூகத்தின் ஏனைய உறுப்பு நாடுகளுடனும் சேர்ந்து பணியாற்ற நாம் விரும்புகிறோம்” என்று அவர் கூறினார்.

நாணய பரிமாற்றங்கள், கடன் மீளச்செலுத்துகை தாமதிப்பு மற்றும் தொடர்கடன்கள் வழியாக இவ்வருடம் மொத்தம் 350 கோடி டொலர்கள் உதவியை இலங்கைக்கு இந்தியா வழங்கியதை சீனா உத்தியோகபூர்வமாக மெச்சியிருப்பது (இலங்கையில் இரு நாடுகளுக்கும் இடையிலான நன்கு அறியப்பட்ட புவிசார் அரசியல் போட்டிக்கு மத்தியில் ) முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

முன்னதாக இவ்வருட தொடக்கத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் இருக்கும் மூன்று தீவுகளில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டிருந்த சீன சக்தி திட்டத்துக்கு பதிலாக இந்திய திட்டமொன்றுக்கு அனுமதியளிக்கப்பட்டது குறித்து சீனா கொழும்பிடம் அதிருப்தி வெளியிட்டிருந்தது.

“ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் போட்டி ஏல நடைமுறைகளின் ஊடாக பெறப்பட்ட ஒரு திட்டத்தை இடைநிறுத்தியமை இலங்கையில் முதலீட்டைச் செய்ய எதிர்பார்த்திருக்கும் வெளிநாட்டவர்களுக்கு நல்லதொரு செய்தியைச் சொல்வதாக இல்லை” என்று மார்ச் மாதம் கொழும்பில் உள்ள சீனத்தூதுவர் ஊடகங்களுக்கு கூறினார்.

இதே உணர்வை கடந்த வாரம் பிரதிபலித்த சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர், “வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் பங்காளிகளின் நியாயபூர்வமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்கு இலங்கை முனைப்புடன் பாடுபடும் என்றும் அதன் நிதியியல் மற்றும் வாணிப சூழலின் உறுதிப்பாட்டையும் நம்பகத்தன்மையையும் பேணிக்காத்து நிலைநிறுத்தும் என்றும் நாம் நம்புகிறோம்” என்று சொன்னார்.

இலங்கையின் மேல்நிலை இருதரப்பு கடனுதவி நாடுகளில் சீனாவும் ஒன்று. ஜப்பானும் அவ்வாறே. ஆனால் சீனக் கடன்கள் இலங்கையின் வெளிநாட்டு கடன்களில் சுமார் 10 சதவீதமாக அமைகின்றன. அந்த வெளிநாட்டுக் கடன்களில் பெருமளவானவை (மொத்த வெளி நாட்டுக் கடன்களில் சுமார் அரைவாசி) சர்வதேச நிதிச் சந்தைகளில் இருந்து பெறப் பட்டவையாகும். வெளிநாட்டு நாணய தட்டுப்பாடு காரணமாக இலங்கை அதன் வெளிநாட்டுக்கடன்கள் சகலதையும் (5000 கோடி டொலர்கள்) மீளச் செலுத்துவதை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இடைநிறுத்துவதாக கடந்த ஏப்ரிலில் அறிவித்தது.



வெளிநாட்டு நாணய தட்டுப்பாட்டினால் அத்தியாவசிய பொருட்களைக் கூட இறக்குமதி செய்ய டொலர்கள் இல்லாமல் இலங்கை தடுமாறுகிறது.

கடன்களை மீளச்செலுத்துவதை இடைநிறுத்துவதாக கொழும்பு அறிவித்ததைத் தொடர்ந்து சீன நிறுவனங்கள் உடனடியாக கடன்களை உகந்த முறையில் தீர்ப்பது குறித்து இலங்கைத் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தன என்று கூறிய ஷாவோ, பொருத்தமான இணக்கத்தீர்வு குறித்து ஆராய இலங்கை சீனாவுடன் முனைப்புடன் பணியாற் றும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும், தற்போதைய சூழ்நிலையை இலங்கை கையாளுவதற்கும் கடன்சுமையைத் தணித்து நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கும் தொடர்ந்து உதவுவதில் பொருத்தமான நாடுகளுடனும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் சேர்ந்து பணியாற்ற சீனா தயாராயிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் விதந்துரைக்கப்படக்கூடிய கடன் மறுசீரமைப்புத் திட்டமொன்றுக்கு சீனாவிடமிருந்து வரக்கூடிய பிரதிபலிப்பு தொடர்பாக கொழும்பில் ஊகங்கள் கிளம்பியிருப்பதற்கு மத்தியில் சீனாவிடம் இருந்து இந்த அறிவிப்பு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடன் மறுசீரமைப்புக்கும் பொருளாதார மீட்சிக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைக் கொழும்பு நாடியிருக்கிறது. நாணய நிதியத்தின் தலைவருடன் கடந்த வாரம் செவ்வாயன்று பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அலுவலர் மட்ட இணக்கப்பாட்டை (Staff level agreement) பூர்த்திசெய்வதற்கு வசதியாக நாணய நிதியத்தின் குழுவொன்றை சாத்தியமானளவு விரைவாக கொழும்புக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டதாக அவரது அலுவலகம் தெரிவித்தது.

அடுத்த 6 மாத காலத்துக்கு நிலைமைச் சமாளிக்க 600 கோடி டொலர்கள் அவசரமாக இலங்கைக்கு தேவைப்படுகிறது. சீனாவிடமும் ஜப்பானிடமும் கூட அது உதவியை நாடியிருக்கிறது. கொரோனாவைரஸ் பெருந்தொற்று காலகட்டத்தில் சீனா இலங்கைக்கு 280 கோடி டொலர்களை உதவியாக வழங்கியது.

ஆனால் சீனாவுடனான நாணய பரிமாற்றுத்திட்டத்தை இலங்கை பெறமுடியாமல் போய்விட்டது. ஏனென்றால் மூன்று மாதங்களுக்கு போதுமான வெளிநாட்டு நாணய கையிருப்பை இலங்கை காட்டினால்தான் அந்த நாணயப்பரிமாற்றத்துக்கு உடன்பட முடியும் என்று சீனா நிபந்தனை விதித்தது. மூன்று மாதங்களுக்கு போதுமான வெளிநாட்டு நாணய கையிருப்பு தங்களிடம் இல்லாததால் அந்த நிபந்தனையை தளர்த்துவது குறித்து பரிசீலிக்குமாறு சீன அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக பிரதமர் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். **(தி இந்து)**

## அகதிகளை பழைய படகுகளில் அழைத்து செல்லும் ஆட்கடத்தல்காரர்கள்!



இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின்போது, சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 38 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் கடந்த 11ம்திகதி கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

அம்பாறை பிரதேசத்தை அண்மித்த கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான படகொன்று பயணிப்பதை கடற்படையினர் அவதானித்துள்ளனர். இதையடுத்து, குறித்த படகு கடற்படை அதிகாரிகளினால் சுற்றிவளைக்கப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, குறித்த படகில் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவிக்கின்றது. அத்துடன், ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ள இந்த தருணத்தில், இலங்கையை விட்டு வெளியேறுவோரின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# மீண்டும் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு செல்வது இலங்கைக்கு பயனுடையது

## சென்னை இந்து ஆசிரிய தலையங்கம்



பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறைக்கு மீண்டும் திரும்பிச்செல்வது பயனுடையதாக இருக்கும் என்று இந்தியாவின் முக்கியமான ஆங்கில தினசரிகளில் ஒன்றான " தி இந்து" அதன் ஆசிரிய தலையங்கத்தில் வலியுறுத்தியிருக்கிறது.

கடந்த சனிக்கிழமை "மீளக் கொண்டுவருதல்" (Restoration) என்ற மகுடத்தில் தீட்டப்பட்ட அந்த ஆசிரிய தலையங்கத்தில் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினர் பதவியால் இருந்து விலகியமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு ஆறுதலைக் கொடுத்திருக்கும் என்று பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

ஆசிரிய தலையங்கத்தின் முழுமையும் வருமாறு:

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச உட்பட ராஜபக்ச குடும்பத்தவர்கள் மீது மக்கள் மத்தியில் கிளம்பியிருக்கும் கடுமையான எதிர்ப்புணர்வை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது முன்னாள் நிதியமைச்சரான பசில் ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து கடந்த வாரம் விலகியமை பெரிய அதிர்ச்சியைத் தரவில்லை.

இலங்கையில் பெருமளவுக்கு வன்முறைகள் மூண்ட பிறகு ஒரு மாதம் கழித்து அவர் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறியதுதான் ஆச்சரியத்தை தருகிறது. "கோட்டா வீட்டுக்குப் போ" என்ற இயக்கத்தை நடத்திவரும் அரசாங்கத்துக்கு எதிரான அமைதிவழி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆளும் பொதுஜன பெரமுன ஆதரவாளர்களினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைத் தாக்குதல்களின் விளைவாகவே நாட்டின் பல பகுதிகளிலும் வன்முறை மூண்டது.

பொதுஜன பெரமுனவின் உயிர்நாடி என்று கருதப்படுகின்ற பசில் ராஜபக்ச ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களின் சூத்திரதாரி என்று குறிப்பிட்ட சில வட்டாரங்களினால் நோக்கப்படுகிறார் என்பதை திரும்பச்சொல்லவேண்டியதில்லை.

இரட்டை குடியுரிமையுடைய இலங்கையர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதை தடுப்பதற்கு புறம்பாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு மேலாக பாராளுமன்றத்துக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக்கொண்ட அரசியலமைப்புக்கான 21 வது திருத்தச்சட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் பசில் ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தது கவனிக்கத்தக்கது. அமெரிக்க குடியுரிமையையும் கொண்டுள்ள அவர் இந்த திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் பாதிக்கப்படக்கூடியவர். முன்கூட்டியே அவர் நிலைவரங்களை விளங்கிக் கொண்டிருக்கக்கூடும்.

அரசியலமைப்பில் முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக பாடுபட்டுக்கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை பசில் ராஜபக்சவின் விலகல் ஒரு ஆறுதலைக் கொடுத்திருக்கும்.

விக்கிரமசிங்க ஏற்கனவே பிரதமராகவும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் பதவிகளில் இருந்தபோது 2015 ஏப்ரிலில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19வது திருத்தத்தை முழுமையாக திரும்பக்கொண்டு வருவதற்கு அவர் விரும்புகிறார் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

வன்முறைகளுக்கு பிறகு சில நாட்கள் கழித்து 19 வது திருத்தத்தை திரும்பக்கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது வாக்கை காப்பாற்ற வேண்டும். அரசியலமைப்புத் திருத்தங்கள் என்ற அரசியல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு முன்னதாக பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுனவுக்குள் இருந்து கிளம்புகின்ற குரல்களின் செல்வாக்கிற்கு அவர் ஆட்பட்டுவிடக்கூடாது.

சர்வதேச சமூகம் இலங்கையில் பெருமளவில் முதலீடுகளைச் செய்வது குறித்து பரிசீலிக்கக்கூடிய உகந்த சூழ்நிலையை அரசியல் நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கும் என்ற பின்புலத்தில் நோக்குகையில் இரு நிகழ்ச்சித்திட்டங்களுமே ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும்.

தனது எஞ்சிய இரண்டரை வருடங்களுக்கும் பதவியில் இருக்கப்போவதாக கூறியிருக்கும் ஜனாதிபதி, இதை மனதிற்கொண்டு முற்றுகைக்குள்ளாகியிருக்கும் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கு விக்கிரமசிங்க முன்னெடுக்கும் பணிகளுக்கு அனுசரணையாகச் செயற்பட்டு ஒத்துழைக்கவேண்டும்.

19வது திருத்தம் நடைமுறை யில் இருந்தபோது அரசியலமைப்புச் சதியொன்றை அன்றைய ஜனாதிபதி சிறிசேன அரங்கேற்றறியதை எதுவும் தடுக்கவில்லை என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. இதன் காரணத்தினால்தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

அப்பதவியை ஒழிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கக்கூடும், ஆனால்உத்தேச 21வது திருத்தம் நிறைவேற்றப்படும் பட்சத்தில்,1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததற்கு பிறகு 30 வருடங்களாக நடைமுறையில் இருந்த பாராளுமன்ற ஆட்சிமுறையை மீண்டும் கொண்டுவரும் இலக்கை முன்னெடுக்க இதுவரையான அனுபவங்களை சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தவேண்டும்.

# அகதிகளை பழைய படகுகளில் அழைத்து ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த ஆண்டில் கடந்த மே மாத இறுதி வரை 2,88,645 கடவூச்சீட்டுக்கள் (பாஸ்போர்ட்) விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

2021ம் ஆண்டு முழுவதும் 3,82,506 கடவூச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனினும், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் மூன்று லட்சத்தை அண்மித்த கடவூச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடவூச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக, குடிவரவு குடியகல்வு திணைக்கள வளாகத்தில் பெரும் எண்ணிக்கையிலானோர் தொடர்ந்தும் காத்திருப்பதை நாளாந்தம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த ஆண்டில் மாத்திரம்



சுமார் ஐந்து லட்சத்தை அண்மித்தோர் வெளிநாடுகளுக்கு செல்லக்கூடும் என அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்து வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை பல மடங்குகளாக அதிகரித்துள்ளன. இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் 1,20,000க்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது. இந்த எண்ணிக்கையானது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 100 வீதம் அதிகரிப்பு என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து தற்போது அதிகளவிலானோர் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, இந்த ஆண்டின் இதுவரையான காலம் வரை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சித்த சுமார் 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கேப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்தார். ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்காக பாவனைக்கு உதவாத பழைய படகுகளே பயன்படுகின்றமை உறுதியாகியுள்ளதாக கடற்படை பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................. (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................. (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .............................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : ...................................................................................... (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ...........................................................

ii) தொளஹ : ...................................................... (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** | 7 | 8 | 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

........................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

...........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

### கல்வி tv CHANNEL-1 — 14.05.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2 — 14.05.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# யானைகள் அட்டகாசம்



திருமலை, ஜூன். 14

திருகோணமலை - சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, லிங்கபுரம் கிராமத்திற்குள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காட்டு யானைகள் உட்புகுந்து சேதம் விளைவித்துள்ளன.

இதன்போது இரண்டு வீடுகள் சேதமடைந்தன. அத்தோடு வீட்டிலிருந்து உபகரணங்கள் பயன்தரும் வாழை மரங்கள், கரும்பு போன்றவற்றையும் துவம்சம் செய்துள்ளது. மேலும் வீட்டிலிருந்தவர்கள் யானைகளிடமிருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இதுகுறித்து லிங்கபுரம் பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்- தொடர்ச்சியாக தமது பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதுவரை 10 பேர் காட்டு யானைகளால் தாக்கப்பட்டு உயிரிழந்ததோடு, பலர் அங்கவீனம் அடைந்துள்ளனர்.

வீடுகளில் இருப்பது அச்சமாக உள்ளதாகவும், தமது உடமைகளையும், பயிர்களைகளையும் காட்டு யானைகள் அடித்து சேதமாக்குவதாகவும், இதுவிடயமாக அதிகாரிகளிடம் சொன்னால் அவர்களும் பெரிதாக கவனத்தில் கொள்வதில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேலும், லிங்கபுரம் பகுதியை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாக்க உரிய தீர்வுகள் கிடைக்கப்பெற வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# மட்டு. - கல்முனை வீதி விபத்து; இருவர் ஆபத்தான நிலையில்!



கல்முனை, ஜூன் 14

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற கார் ஒன்று கல்லடி சாந்தி படமாளிகைக்கு முன்னால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பாதை மாறி கல்முனை திசையிலிருந்து மட்டக்களப்பு பக்கமாக எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணத்தவரும், காரில் பயணித்த ஒருவருமாக படுகாயங்களுக்கு இலக்காகினர். இருவரும் மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய கார், பாராளுமன்றத்தில் கடமை புரியும் ஒருவருடையது என்றும், காருக்குள் மதுபான போத்தல்கள் காணப்பட்டன என்றும் தெரிவித்த காத்தான்குடி பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# 5,000 கிலோ சுறா சிக்கியது!



மட்டக்களப்பு, ஜூன் 14

கிண்ணியாவில் மீனவர்களின் வலையில் சிக்கிய 5,000 கிலோ கிராம் நிறை மதிக்கத்தக்க சுறா வகையைச் சேர்ந்த மீனொன்று சிக்கியுள்ளது.

கிண்ணியா கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் வலையில், இந்த மீன் சிக்கியுள்ளது. அதனை பெரும் சிரமத்துக்கு மத்தியிலேயே மீனவர்கள் கரைக்குக் கொண்டுவந்துள்ளனர். (அ)

# அதிக விலைக்கு அரிசி விற்பவர்களை தேடும் நடவடிக்கை கிழக்கில் தீவிரம்!



அம்பாறை, ஜூன். 14

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் மற்றும் பதுக்கி வைக்கும் வர்த்தகர்கள், ஆலை உரிமையாளர்களைத் தேடி அம்பாறை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள னர்.

நாட்டில் தற்போது அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன்படி நேற்று சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நாவிதன்வெளி, மத்திய முகாம் போன்ற பிர தேசங்களில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

# அட்டாளைச்சேனை பள்ளிவாசலுக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் கையளிப்பு



மட்டக்களப்பு, ஜூன். 14

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட றஹ்மத் நகர், கச்சேனை மஸ்ஜிதுர் றஹ்மா ஜும்ஆ பள்ளிவாசலின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த ஒலிபெருக்கி வசதியை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பள்ளிவாசலின் இறை அழைப்புப் பணிக்கு அவசியமாக காணப்பட்ட ஒலிபெருக்கி வசதியை ஏற்படுத்தி தருமாறு அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதற்கமைய நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நிந்தவூரைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தரும் கட்டார் நாட்டில் சிரேஷ்ட திட்ட முகாமையாளராக கடமையாற்றி வரும் அல்-ஹாஜ் ஏ ஜிப்ரி தனது மனைவியின் ஞாபகார்த்தமாக இறை திருப்தியை நாடி சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் இந்த பள்ளிவாசலுக்கு தேவையான ஒலிபெருக்கி வசதிகள் வழங்கினார்.

இதனை கையளிக்கும் நிகழ்வு இன்று அட்டாளைச்சேனை றஹ்மத் நகர் கச்சேனை மஸ்ஜிதுர் றஹ்மா ஜம்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது

பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் தலைவர் ஐ எம் நிஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏ.ஜிப்ரியின் புதல்வர் ஜிப்ரி முஹம்மட் பர்ஹத் மனாஸ், நிந்தவூர் கதீப் பேஷ் இமாம் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எம்.ஏ.சி. எம் அப்துர் றஹ்மான், பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ.புஹாது, பொருளாளர் எஸ்.ஏ. பாஸித் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# சண்முகா இந்து அதிபருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

திருமலை, ஜூன். 14

திருகோணமலை ஷண்முகா இந்துக் கல்லூரியில் ஹபாயா அணிந்து சென்றமைக்காக வெளியேற்றப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ் பாடசாலையின் அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் அதிபர் லிங்கேஸ்வரிக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் எழுத்து மூலக் கட்டளைக்கிணங்க சென்ற பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலை ஷண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு கடமையேற்பதற்காக சென்றிருந்த பஹ்மிதா றமீஸ் கடமையேற்கவிடாது பல குழப்பங்களை ஏற்படுத்தி, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தனது சட்டரீதியான கடமையை செய்யத் தடுத்தமை என்ற குற்றச்சாட்டின் பெயரின் திருகோணமலை ஷண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றில் சென்ற மார்ச் மாதம் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

குறிப்பிட்ட வழக்கில் ஆசிரியை பஹ்மிதாவுக்கு ஆதரவாக குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகளான றதீப் அஹமட், ஹஸன் றுஷ்தி, முஹைமின் காலித் மற்று ஸாதிர் அஹமட் ஆகியோர் ஆஜராகி சமர்ப்பணம் செய்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் இம்மாதம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டத்தரணிகளான முபஸ்லீன் மற்றும் றிஸ்வான் ஆகியோர் வாதிதரப்பில் ஆஜராகி இருந்தனர்.ஏலவே மன்றின் நீதிபதியவர்கள் குரல்கள் இயக்க சட்டத்தரணிகள் செய்ய சமர்ப்பணத்தை ஏற்று பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப நீதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார். இவ்வழக்கானது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகின்றது. (அ)

# வெனிசுலாவில் முதல் குரங்கம்மை

## உலகெங்கும் 1,472 பேர் பாதிப்பு

கரகாஸ், ஜூன். 14

வெனிசுலாவில் முதல் குரங்கம்மை தொற்று நோயாளி உறுதி செய்யப்பட்டுள்ளார். ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் இருந்து வந்த ஒருவர் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை கடந்த ஞாயிற்றுக்கிழமை உறுதி செய்யப்பட்டதாக வெனிசுலா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குரங்கம்மை தொற்று உறுதி செய்யப்பட்டவர் தனிமைப்படுத்தபட்டு, சிகிச்சை அளிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவருடன் நேரடித் தொடர்பு உள்ளவர்களை கண்டறிந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வெனிசுலா சுகாதார அமைச்சர் மாகலி குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் பாதிக்கப்பட்டவர் குறித்த மேலதிக தகவல்களை அவர் வெளியிடவில்லை.

இதேவேளை, உலகில் பல்வேறு நாடுகளில் இதுவரை 1,472 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மைய தரவுகள் தெரிவிக்கின்றன. (அ)

# நாளையுடன் விடைபெறுகிறது "எக்ஸ்ப்ளோர்" தேடல்பொறி!

நியூயோர்க், ஜூன் 14

நாளை புதன்கிழமை முதல் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் இன்ரர்நெற் எக்ஸ்ப்ளோர் தேடல்பொறி விடைபெறுகிறது. கடந்த ஆண்டு இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருந்தது அந்நிறுவனம்.

கடந்த 27 ஆண்டுகளுக்கு முன்னர் 1995ஆம் ஆண்டு இன்ரர்நெற் எக்ஸ்ப்ளோர் தேடல் பொறி அறிமுகமானது. அக்காலத்தில் மக்கள் இணைய வெளியில் தேடுவதற்கு இந்த தேடல் பொறியையே பயன்படுத்தினர்.

படிப்படியாக இன்ரர்நெற் எக்ஸ்ப்ளோர் தேடல்பொறி புதிய வடிவமைப்பை பெற்றது. 2015 மைக்ரோசொப்ட் எட்ச் பிரவுசர் அறிமுகமானது. அதன் பின்னர் எந்த புதிய வடிவமைப்பும் வெளியாகவில்லை. இந்நிலையில், கூகுள் குரோம், பையர் பொக்ஸ் என பல்வேறு தேடல் பொறிகள் இன்ரர்நெற் எக்ஸ்ப்ளோர் தேடல்பொறிக்கு கடும் சவாலை அளித்தன. இந் நிலையில், இன்ரர்நெற் எக்ஸ்ப் ளோர் தேடல்பொறி நாளையுடன் விடைபெறுகிறது.

# அறுதிப் பெரும்பான்மை மக்ரோனுக்குக் கிட்டாது!

## மெலன்சோனின் கூட்டணி ஆளும் தரப்புடன் சமநிலை

பரிஸ், ஜூன். 14

**பிரான்ஸின் பாராளுமன்றத் தேர்தலின் முதற்சுற்று முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. உத்தேச மதிப்பீடுகளின்படி அதிபர் மக்ரோனின் ஆளும் தரப்புக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலையில் இருக்கிறது.**




கடும் போக்கு இடதுசாரி ஜோன் லூக் மெலன்சோனால் உருவாக்கப்பட்ட "நியூப்ஸ்" என்னும் இடதுசாரிகள் கூட்டணி அதிகமான தொகுதிகளில் முதனிலை பெற்றுள்ளது.

ஆளும் கட்சிக்கும் அந்தக் கூட்டணிக்கும் இடையே சரிக்குச் சமனான கடும்போட்டி நிலவுவதை முடிவுகள் காட்டுகின்றன.

மக்ரோனின் ஆளும் மூன்று கட்சிக் கூட்டணி பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெறுவதற்கு குறைந்தது 289 ஆசனங்களை வெல்ல வேண்டும். முதற்சுற்று மதிப்பீடுகளின் படி ஆளுங்கட்சிக்கு 255 ஆசனங்களே கிடைக்கும் என்றும் மெலன்சோன் கூட்டணி 150 - 190 இடங்களைக் கைப்பற்ற லாம் என்றும் கணிக்கப்படுகிறது. தீவிர வலது சாரி மரின் லூ பென் கட்சி மூன்றாவது இடத் தில் 20-45 ஆசனங்களை வெல்லும் நிலையில் உள்ளது.

நாடாளுமன்றத்தில் இடதுசாரி அலை வீசப்போவதை முடிவுகள் கோடி காட்டுவதாக தேர்தல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். மக்ரோனின் கட்சி தாக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்றும் இரண்டாவது இறுதிச் சுற்றில் தமது தரப்புக்கு மேலும் பெரும் வெற்றி கிட்டும் என்றும் மெலன்சோன் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

சமீப காலத் தேர்தல்கள் வரலாற்றில் தொடர்ந்து வருவது போன்று இந்தத் தேர்தலிலும் வாக்களிக்காதோர் வீதம் புதிய சாதனையைத் தொட்டுள்ளது.

வாக்காளர்களில் இருவரில் ஒருவர் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை என்பதைக் காட்டும் விதமாக வாக்களிக்காதோர் வீதம் 52.5 வீதமாகப் பதிவாகியுள்ளது.

இரண்டாவது இறுதிச் சுற்று எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ளது. (அ)

# சீனாவை எதிர்க்கவே தாய்வானுக்கு ஆயுதங்கள் வழங்குகிறது அமெரிக்கா

## சீனா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 14

சீனாவை எதிர்க்கும் போர்வையிலேயே தாய்வானுக்கு ஆயுதங்களை வழங்குவதற்காகவே அமெரிக்கா அறிவித்துள்ளது என சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பெங்க் கூறுகையில்-

பன்முகத்தன்மை என்ற போர்வையில் அமெரிக்கா தனது நாட்டின் நலன்களை பிற நாடுகளின் மீது திணிக்கிறது. எந்த நாடும் தன் விருப்பத்தை மற்ற நாடுகள் மீது திணிக்கக்கூடாது, பிற நாடுகளை கொடுமைப்படுத்த கூடாது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர்ப்பதற்காக, இந்தோ-பசிபிக் என்ற பெயரில் ஒரு சிறிய அமைப்பை அமெரிக்கா உருவாக்கும் முயற்சி, ஆசிய நாடுகள் சீனாவுக்கு தரும் ஆதரவை பறிக்கும் முயற்சியே ஆகும்.

இது மற்றவர்களைக் கட்டுப்படுத்தவும் மோதலையும் உருவாக்குவதற்கான ஒரு உத்தியாகும். சீனா தனது இராணுவத்தை விரைவாக நவீனப்படுத்தி வருகிறது. சமீபத்தில் சீனா, சாலமன் தீவுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இது பசிபிக் கடற்பகுதியில் சீனக் கடற்படைத் தளம் உருவாகலாம் என்ற அச்சத்தை அமெரிக்கா உருவாக்கி, தென் சீனக் கடல் பகுதிகளில் போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை அமெரிக்கா நிறுத்துகிறது. இது எங்கள் பிராந்திய விவகாரங்களில் தலையிடுவதாகும். பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் நாடுகளுடன் சீனாவிற்கு கடல்சார்ந்த பிரச்னை உள்ளது.

இந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகள் தங்கள் கடல் சார்ந்த பிரச்சினைகளை தாங்களாகவே தீர்த்து கொள்ள வேண்டும். தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே சீனாவை எதிர்க்கும் போர்வையில் தாய்வானுக்கு ஆயுதங்களை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது-என்றார். (அ)

# மேலும் 46 போர்க்கப்பல்களை கடற்படையில் சேர்த்த ரஷ்யா




மொஸ்கோ, ஜூன். 14

ரஷ்ய கடற்படை இந்த ஆண்டில் மேலும் 46 போர்க்கப்பல்களையும் துணைக் கப்பல்களையும் தனது சேவையில் இணைக்கும் என ரஷ்ய கடற்படைத் தலைமைத் தளபதி நிகோலாய் யெவ்மெனோவ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

டீசல் மற்றும் மின் சக்தியில் இயங்கக்கூடிய இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களை ரஷ்ய கடற்படையில் இணைக்கும் நிகழ்வு ரஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரமான சென். பீட்டர்ஸ்பர்க்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேசிய ரஷ்ய கடற்படைத் தலைமைத் தளபதி நிகோலாய் யெவ்மெனோவ், உலக இராணுவ-அரசியல் நிலைமைக்கு ஏற்ப ரஷ்யா வலுவான மற்றும் சீரான கடற்படையை கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

ரஷ்ய கடற்படை குறைந்தபட்சம் 70 வீதம் தற்போதைய சூழலுக்குப் பதிலளிக்கக்கூடிய நவீன கப்பல்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் விருப்பத்தை அவர் மீண்டும் வலியுறுத்தினார். (அ)

# சீனா-சோங்கிங் பூங்காவில் கோலகலமாக பிறந்தநாள் கொண்டாடிய பண்டா கரடிகள்!

பீஜிங், ஜூன். 14

தென்மேற்கு சீனாவின் சோங்கிங் நகராட்சி பகுதியில் உள்ள சோங்கிங் உயிரியல் பூங்காவில் உள்ள ஆறு பாண்டா கரடிகளின் பிறந்த நாள் விழாவை பொதுமக்கள் மற்றும் பூங்கா நிர்வாகத்தினர் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஒரு வயதான ஜிங்சிங் மற்றும் சென்சென் ஆகியவற்றுடன் இணைந்து ஏனைய கரடிகளுக்கும் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறந்த நாள் விழா எடுக்கப்பட்டது.

பாண்டா கரடிகளின் பிறந்தநாளை ஒட்டி உயிரியல் பூங்காவில் பாண்டா கரடிகளின் வசிப்பிடம் மூங்கில் தண்டுகள், அப்பிள், தர்பூசணி மற்றும் கரட் போன்ற ஏராளமான காய், கனிகளால் அலங்கரிக்கப்பட்டது.

மேலும் அங்கு வைக்கப்பட்ட கேக்களை பாண்டா கரடிகள் ஆர்வமுடன் உண்டு மகிழ்ந்தன.

இந்தக் காட்சிகளை உயிரியல் பூங்காவுக்கு வந்த ஏராளமான பார்வையாளர்கள் கண்டு ரசித்தனர். (அ)



# ஐ. சி. சியின் சிறந்த வீரர் விருது; முதன்முதலாக இலங்கையருக்கு



டுபாய், ஜூன் 14

ஐ. சி. சியின் சிறந்த வீரருக்கான மாதாந்த விருதை முதன்முறையாக இலங்கையின் அஞ்சலோ மத்தியூஸ் பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையான (ஐ. சி. சி.) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர்களுக்கான பட்டியலை வெளியிடுகிறது. தற்போது, மே மாதத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஆண்கள் பிரிவில் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் சகலதுறை வீரருமான அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 2021 ஜனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விருதைப் பெறும் முதல் இலங்கை வீரர் இவராவார்.

இவர் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இரு சதங்களுடன் 344 ஓட்டங்களை குவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல மகளிர் பிரிவில் பாகிஸ்தானின் இளம் சுழல்பந்து வீச்சாளர் துபா ஹசன், சிறந்த வீராங்கனையாகத் தெரிவாகியுள்ளார். தனது முதல் தொடரில் இலங்கைக்கு எதிராக 5 விக்கெட்களை அவர் வீழ்த்தியருந்தார். (ஐ)

நியூசிலாந்துடனான டெஸ்ட்

# 176 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரூட்



லண்டன், ஜூன் 14

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் மூத்த வீரர் ஜோ ரூட், 176 ஓட்டங்ளுக்கு ஆட்டமிழந்தார்.

லோர்ட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று 1-0 என முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி நாட்டிங்ஹாமில் நடக்கிறது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸுக்காக 145.3 ஓவர்களில் 553 ஓட்டங்கள் எடுத்தது. டரில் மிற்செல் 190, ரொம் பிளண்டல் 106 ஓட்டங்கள் எடுத்தனர்.

அண்டர்சன் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதையடுத்து, துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி 3ஆம் நாள் முடிவில், 114 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 473 ஓட்டங்கள் எடுத்தது. ரூட் 163, போக்ஸ் 24 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் போட்டி ஆரம்பமானபோது, இரட்டைச் சதம் எடுப்பார் என எதிர்பார்க்கப் பட்ட ஜோ ரூட், போல்ட்டின்பந்தில் 176 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி 120 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 516 ஓட்டங்களை (இந்த செய்தி எழுதப்படும்போது) எடுத்துள்ளது. போக்ஸ் 54 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ஐ)

# தென்னாபிரிக்க அணியிடம் மீண்டும் வீழ்ந்தது இந்தியா!



கட்டாக், ஜூன் 14

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியிலும் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது.

இந்தியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி இருபது - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதன் இரண்டாவது போட்டி கட்டாக்கில் நேற்று முன்தினம் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்களை எடுத்தது.

இதில், இஷான் கிஷன் 34, ஸ்ரேயாஸ் ஐயர் 40, தினேஷ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தனர். 149 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கு டன் தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர்களாக பவுமா, ஹென்றிக்ஸ் களமிறங்கினர்.

முதல் ஓவரில் ஹென்றிக்ஸை ஆட்டமிழக்க செய்தார் புவனேஷ்வர் குமார். தொடர்ந்து இரண்டாவது ஓவரில் பிரிட்டோரியஸையும் மூன்றாவது ஓவரில் வான் டேர் டுசனையும் வெளியேற்றினார் அவர். இதனால் தென்னாபிரிக்க அணி தடுமாறியது.

எனினும், பவர் பிளேயின் பின்னர் - 9ஆவது ஓவரில் ஹென்றிக் கிளாஸன் இந்தியாவின் பந்துவீச்சை பதம் பார்க்க ஆரம்பித்தார். அவரின் ஆட்டத்துக்கு பவுமா சிறப்பாக ஆதரவு வழங்க தென்னாபிரிக்க அணியின் ஓட்டம் வெகுவேகமாக உயர ஆரம்பித்தது.

எனினும், இந்த இணை நீண்டநேரம் நிலைக்கவில்லை. சஹால் சுழலில் பவுமா (35 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு, கிளாஸன் 32ஆவது பந்தில் அரைச்சதத்தைக் கடந்தார். டேவிட் மில்லர் நிதானிக்க, கிளாஸன் வெற்றி இலக்கை நோக்கி ஆடினார்.

தொடர்ந்து கிளாஸன் அதிரடி காட்டிய கிளாஸன் இறுதியாக 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால், களத்தில் நின்ற டேவிட் மில்லர் பதற்றமில்லாமல் வெற்றி இலக்கை அடையச் செய்தார்.

18.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களை எடுத்த தென்னாபிரிக்கா 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம், 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் தென்னாபிரிக்க அணி 2-0 என முன்னிலை வகிக்கிறது.

# ஒருநாள் தொடரிலிருந்து ரிச்சர்ட்சன் விலகினார்!




கொழும்பு, ஜூன் 14

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் கேன் ரிச்சர்ட்சன் விலகியுள்ளார்.

கிரிக்கெட் சுற்றுப் பயணமாக இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 3 இருபது - 20, 5 ஒருநாள், 2 டெஸ்ட் தொடர்களில் விளையாடுகிறது.

இதில், இருபது - 20 தொடரை ஆஸி. 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இந்தத் தொடரிலிருந்து கேன் ரிச்சர்ட்சன் விலகியுள்ளார். காயம் காரணமாகவே அவர் விலகியுள்ளார். ஏற்கனவே, மிற்செல் ஸ்ரார்க், மிற்செல் மார்ஷ் ஆகியோர் ஒருநாள் தொடரின் ஆரம்ப போட்டிகளில் விளையாடவில்லை. இந்நிலையில் கேன் ரிச்சர்ட்சனின் விலகல் அந்த அணிக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

எனினும், ரிச்சர்ட்சனுக்கு பதிலாக பட் கம்மின்ஸ் அணிக்குள் வந்திருப்பது அந்த அணிக்கு பலம் சேர்க்கும் என்று கருதப்படுகின்றது.

# ஓய்வு முடிவை மாற்றினார் இங்கிலாந்தின் மொயீன் அலி!

லண்டன், ஜூன் 14

இங்கிலாந்தின் சகலதுறை வீரர் மொயீன் அலி, டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாகக் கடந்த ஆண்டு செப்ரெம்பரில் அறிவித்தார். ஆனால் அவர் தற்போது தனது முடிவை மாற்றியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக 64 டெஸ்ட்கள், 112 ஒருநாள், 38 இருபது -20 போட்டிகளில் மொயீன் அலி விளையாடியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் 2,914 ஓட்டங்களும் 195 விக்கெட்களும் எடுத்துள்ளார்.

டெஸ்டில் ஓய்வு பெறுவதாக அறிவித்த அவர், ஒருநாள், இருபது - 20 போட்டிகளில் விளையாடுவேன் எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில், அவர் அந்த முடிவை மாற்றியுள்ளார். மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் விளையாட அவர் விருப்பம் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில்,



இங்கிலாந்து டெஸ்ட் பயிற்றுவிப்பாளர் மக்கலம் எப்போது என்னை அழைத்தாலும் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நான் விளையாடத் தயார். பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த நான் இங்கிலாந்து அணியினருடன் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடுவது அற்புதமானது. பல வருடங்களுக்குப் பிறகு இங்கிலாந்து அணி பாகிஸ்தானுக்கு விளையாட செல்வதால் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு தொடராக அது அமையும். மக்கலமிடம் நான் பேசினேன். பாகிஸ்தான் தொடர் பற்றி இருவரும் விவாதித்தோம். கதவு எப்போதும் திறந்திருக்கிறது. இதனால் நான் ஓய்வு பெறும் முடிவைத் திரும்பப் பெற்றதாக எண்ணிக் கொள்ளலாம். அவரிடம் முடியாது என சொல்ல முடியாது. எனக்கு அது மிகவும் கஷ்டமா னது. அப்போது நான் சோர்வாக உணர்ந்ததால் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றேன். இப்போது ஸ்ரோக்ஸ், மக்கலம் தலைமையின் கீழ் விளையாட ஆர்வமாக உள்ளேன் - என்றார். (ஐ)

ஈழநாடு



# இனவாதத்தை கையிலெடுக்கும் முயற்சியை உடன் கைவிடுங்கள்

## அரசிடம் கோருகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

*யாழ்ப்பாணம், ஜூன் 14*

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவல நிலைக்கு எதிராக எழுச்சி பெற்றுள்ள மக்கள் போராட்டத்தை திசைதிருப்ப இனவாதத்தைக் கையிலெடுத்துள்ள அரசாங்கம் தனது முழுமையான அனுசரணையுடன் குறுந்தூர்மலையில் நீதிமன்ற தடையையும் மீறி கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரையில் கடந்த 12 ஆம் திகதி புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்ய முயற்சித்துள்ளது. பிரதேச மக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக அந்த முயற்சி தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டிருப்பதுடன், அரசாங்கத்தின் இன்றைய பொருளாதார பொருளாதார வீழ்ச்சி எத்தகைய மனிதபிமானச் செயற்பாடு என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

2008-2009ஆம் ஆண்டுகளில் நடந்த யுத்த இறுதிகாலத்தின் பொழுது, இது மனிதாபிமானத்திற்கான ஒரு யுத்தம் என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக, இராணுவத்தினரின் ஒரு கையில் துப்பாக்கியும் மறுகையில் பாடசாலை சிறுமியின் படத்தையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதன் மூலம் இலங்கை இராணுவம் என்பது சிறுவர்களின் கல்வி தொடக்கம் அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகளிலும் அக்கறை செலுத்துவதாக உலகத்திற்குக் காட்ட இலங்கை அரசாங்கம் முயற்சித்தது. ஆனால் அதே யுத்தத்தை நடத்திய ராஜபக்ஷ குடும்பத்தினரின் இன்றைய ஆட்சி அதிகாரத்தின் கீழ் குழந்தைகளுக்கான பாடசாலைப் புத்தகங்கள் இல்லை, அப்பியாசக் கொப்பிகள் இல்லை, பாடசாலை உபகர ணங்கள் இல்லை என்ற நிலைக்கு முழு நாட்டையும் தள்ளியிருக்கிறது.

அப்பொழுது யுத்தத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக மனிதாபிமான முத்திரை குத்தினார்கள். இப்பொழுது ஒட்டுமொத்த நாட்டின் பாடசாலைச் சிறார்களும் தமது கல்விகற்கும் உரிமையை இழந்து தவிக்கின்றனர். இதுதான் இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமான வெளிப்பாடா? அல்லது நிர்வாகத் திறமையா? நாட்டின் இத்தகைய நிலைக்கு இன்றைய ஆட்சியாளர்கள் எத்தகைய விளக்கத்தைக் கொடுக்கப்போகின்றனர்? யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு-கிழக்கில் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையை அன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை ஆயுதப்படைகளின் துணையுடன் அடக்கியொடுக்கினார்கள். தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக பாரிய யுத்தத்தைக் கொண்டு நடத்தினார்கள். இதனால் ஒட்டுமொத்த நாடும் அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருட்கள், உயிர்காக்கும் மருந்துகள் இன்றி தவிக்கின்றது.

இலங்கையின் நிலைமையை அவதானித்து வரும் ஐ.நா. "இலங்கை பாரிய மனிதாபிமான பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளது" என்று தெரிவித்துள்ளது. இவை ஒருபுறமிருக்க, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அடுத்த வாரத்திலிருந்து வெள்ளிக்கிழமையும் அரசாங்க ஊழியர்களுக்கு விடுமுறை நாளாகக் கணிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

அத்துடன் ஏற்கனவே அரச உத்தியோகத்தர்கள் விரும்பின், ஐந்து வருடம் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்துக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நடந்த காலத்தில் ஏறத்தாழ 15 இலட்சம் தமிழ் மக்கள் வெளிநாடுகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். இவர்களில் பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகளும் துறைசார் வல்லுநர்களும் அடங்குவர்.

அதேபோன்று தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கை நியாயமானது என்று வாதாடிய சிங்கள ஜனநாயக முற்போக்குவாதிகளும் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இப்பொழுது முழு நாட்டையும் கொள்ளையடித்து குட்டிச்சுவராக்கி, நிர்வாகச் சீர்கேடுகளை உருவாக்கி, நாட்டில் எஞ்சியிருக்கின்ற நிர்வாகத் திறமையாளர்களையும் துறைசார் வல்லுநர்களையும் வெளியில் அனுப்ப முயற்சிக்கின்றீர்கள்.

கடந்த சில மாதங்களாக இந்தியா ஏறத்தாழ மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அரிசி, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு அத்தியாவசிய மருந்துப்பொருட்கள், மற்றும் பசளை போன்றவற்றை வழங்கி வருகிறது.

அந்த உதவிகள் அடுத்த சில நாட்களில் முடிவடையும் கட்டத்தை எட்டியுள்ளது. இதன் பின்னரான காலப்பகுதியில் ஏற்படப்போகின்ற தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எத்தகைய திட்டமும் தீட்டப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

அடுத்தடுத்த வாரங்களுக்கு எரிபொருள் கிடைக்குமா? எரிவாயு கிடைக்குமா? மின்சாரம் தடையின்றி கிடைக்குமா? அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்குமா? உயிர்காக்கும் மருந்துகள் தடையின்றி கிடைக்குமா என்பது நிச்சயமற்ற நிலையில் அச்சமான சூழல்நிலையே நிலவுகின்றது. அரசாங்கத்தாலும் எதனையும் திட்டமிட முடியவில்லை.

அரசாங்கத்தின் மோசமான நிர்வாகச் சீர்கேடுகளினால் பொதுமக்களலாலும் எதனையும் திட்டமிடமுடியவில்லை. இந்த இலட்சணத்தில் நீங்கள் தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் இருப்பதற்கு தகுதியானவர்கள்தானா என்பதை உங்கள் மனச்சாட்சியுடன் நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

நாட்டின் இவ்வளவு சீர்கேடுகளுக்கு மத்தியில் நாட்டின் உண்மையான பிரச்னைகளை அடையாளம் காணாமல், இன்னும் சிங்கள, தமிழ் கலவரங்களை உருவாக்கி, மக்களை திசைதிருப்பி, அவர்களை ஒருவருக்கொருவர் மோதவிட்டு இனவாதத்தில் குளிர்காயத்தான் முயச்சி செய்கின்றீர்கள்.

ஒரு சிங்கள மகன்கூட இல்லாத குருந்தூர் மலையில், காலாகாலமாக சைவ மக்கள் சிவ வழிபாட்டை நடாத்திவரக் கூடிய அந்த மலையில், நீதிமன்றத் தடைகளையும் துச்சமென மதித்து, பாரிய பௌத்த தாதுகோபுரத்தை எழுப்பியதன் நோக்கமென்ன? இது ஒரு தொல்பொருள் அமைவிடமாக இருந்தால் அதுஒரு தொல்பொருள் இடமாகப் பராமரிக்கப்பட வேண்டுமே தவிர, அதனை ஒரு பௌத்த இடமாக மாற்றுகின்ற உங்களது மேலாதிக்க சிந்தனை என்பது நாட்டை மேலும்மேலும் சீரழிக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்- என்றுள்ளது.

(அ)


# வீட்டுத் தோட்டம் செய்வோம்

**வளம் கொழிக்கும் பூமி என**
**வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்**
**பெயர் பொறித்த நம் தாய்நாடு.**
**இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்**
**உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.**
**மூன்று வேளை உணவு இருவேளையாகவும்**
**ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.**
**பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே**
**நிழலாடுகின்றன...!**



## போதும்...! ஏந்திய கைகள்
## சற்றே உயரட்டும்

**நாம் வாழ்ப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!**

## வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
## நமது பசியை நாமே போக்க...
## எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!

**பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு**
**போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!**
**திட்டமிடலும் உழைப்புமே**
**நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!**

DAN TELEVISION
www.dantv.tv

ஈழநாடு
Eelanadu

## புலம்பெயர்...

கூட்டத் தொடரில் நேற்று உரையாற்றிய வெளிவிகார அமைச்சர் மேலும் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,

எதிர்காலத்துக்கான நிலையான அடித்தளமாக, பரந்த அடிப்படையிலான அரசாங்கத்தின் ஊடாக தேசிய பிரச்னைகளுக்கு ஒருமித்த அணுகுமுறையை ஜனாதிபதியும் பிரதமரும் கோரியுள்ளனர்.

புதிய பிரதமரின் நியமனம் மற்றும் பல கட்சிகளை உள்ளடக்கிய புதிய அமைச்சரவையின் நியமனம் ஆகியவற்றுடன் அரசியல் மாற்றங்கள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன.

அரசியலமைப்பின் 21வது திருத்தத்தின் தேவை, பாராளுமன்றம், சுயாதீன நிறுவனங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களின் மீதான சரிபார்ப்பு மற்றும் சமநிலை ஆகியவற்றில் உள்ள அடிப்படை ஜனநாயக விழுமியங்களை ஒருங்கிணைப்பதற்காக, அனைத்து கட்சிகளின் ஒருமித்த கருத்தை உருவாக்குவதில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

இந்த சீர்திருத்தங்கள் ஜனநாயக அரசியலமைப்புக் கட்டமைப்புக்குள் மற்றும் உரிய நடைமுறைக்கு ஏற்ப நடைபெறுவதை நாம் கூட்டாக உறுதி செய்ய வேண்டும். மாற்றத்தின் செயன்முறையானது, வலுப்படுத்த விரும்பப்படும் ஜனநாயக அமைப்புக்களை அழிக்கக் கூடாது. கருத்து வேறுபாடுகள் அமைதியானதாகவும், ஜனநாயக வெளிக்குள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

அண்மைய இடையூறுகளின் போது, சட்டம் மற்றும் பொது ஒழுங்கைப் பேணுதல் மற்றும் அத்தியாவசிய பொருட்களை தடையின்றி விநியோகிக்க அனுமதிக்கும் ஒரே நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் அவசரகால விதிமுறைகள் விதிக்கப்பட்டன.

மே 9ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் அதன் பின்விளைவுகள் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகள், சட்டமா அதிபரின் முன்மாதிரி மற்றும் நேரடியான நீதித்துறை மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன. அத்துடன், ஏற்படுத்தப்பட்ட மரணங்கள் குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மக்களுக்கு அத்தியாவசியமானவற்றை வழங்கவும், சர்வதேச நாணய நிதிய ஆதரவுத் திட்டத்துக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படும் உறுதியான நடவடிக்கைகளை நாங்கள் உருவாக்குகின்றோம். முன்னோக்கிச் செல்வதில், உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்காளிகள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் நாங்கள் உரையாடுகின்றோம். நமது பொருளாதாரத்தை மீண்டும் நிலையான அபிவிருத்திப் பாதையில் வைப்பதற்கும், உணவு, உரம், எரிசக்தி மற்றும் மருந்துகள் போன்ற தேவைகளை வழங்குவதற்கும் ஒரு ஒத்திசைவான கட்டமைப்பை நாங்கள் ஒன்றிணைத்து வருகின்றோம்.

தற்போதைய சூழ்நிலை மற்றும் எதிர்கால சீர்திருத்த நடவடிக்கைகள் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, இந்த விளைவுகளைத் தணிப்பதற்கான இலக்கு சார்ந்த சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நாங்கள் உறுதியாக உள்ளோம். மனித உரிமைகள் பிரிக்க முடியாதவை, ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை மற்றும் ஒன்றுக்கொன்று சார்ந்தவை என்பதை ஒரு முக்கிய நம்பிக்கையாக நாங்கள் அங்கீகரிக்கின்றோம்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 49ஆவது அமர்வு உட்பட, இலங்கை தொடர்பாக எழுப்பப்பட்ட தொடர்ச்சியான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் கடந்த ஆண்டுகளில் நாங்கள் சபையுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

இன்று, நாம் ஒரு பரந்த சமூக சூழலில் குறைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்க்க முற்படுகையில், உள்நாட்டு செயன்முறைகள் மூலம் மோதலுக்குப் பிந்தைய ஒருங்கிணைப்பில் மேலும் உறுதியான முன்னேற்றத்தை நிரூபிப்பது கட்டாயமானதும், சவாலானதுமாகும். இந்த சபையுடன் செயலில் ஈடுபடுவதன் மூலம் அதைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம்.

கடந்த கூட்டத்தின் பின்னர், உறுதியளித்தபடி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்து, அது நிறைவேற்றப்பட்டது. இந்தத் திருத்தங்களின் ஒட்டுமொத்த விளைவு, தற்போதுள்ள சட்டத்தில் கணிசமான முன்னேற்றத்தையும், ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதோடு, இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரங்களுக்கான காரணத்தை மேலும் அதிகரிக்கும்.

இந்த சபையின் கடைசி அமர்வுக்குப் பின்னர், 2022 மார்ச் முதல் ஜூன் வரை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 13ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், அதன் சரிபார்ப்பு செயன்முறையின் ஒரு பகுதியாக, விசாரணைக் குழுவுக்கு அழைக்கப்பட்ட 83வீதத்துக்கும் அதிகமான நபர்களை சந்தித்துள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகம், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், ஆண்டுக் கான இழப்பீடுகளை வழங்குவதற்காக, அதன் ஆரம்ப ஒதுக்கீடான ரூபாய் 759 மில்லியனுக்கும் மேலதிகமாக, ரூபாய் 53 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

மோதலின் முடிவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 92வீதத்துக்கும் அதிகமான தனியார் நிலங்கள் முறையான உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8,090 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பாக, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றங்களுக்கு பல குற்றப்பத்திரிகைகளை அனுப்பியுள்ளதோடு, அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

புலம்பெயர் சமூகத்துடனும், எமது நாட்டின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் ஈடுபடுவதற்கு இலங்கை திறந்த நிலையில் உள்ளது. மனித உரிமைகள் ஆணையத்தின் 46/1 தீர்மானத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையை இலங்கை நிராகரிப்பதை கடந்த காலத்தில் நான் தெளிவுபடுத்தினேன்.

இந்த பொறிமுறையானது துருவப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் மட்டுமே உதவும். இதேவேளை, இந்த சபை மற்றும் அதன் உறுப்பினர்களின் வளங்களில் பயனற்ற மற்றும் உதவியற்ற வீண் நிலையை ஏற்படுத்தும் என்ற எமது நம்பிக்கையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

முடிவில், இலங்கையின் சவாலான சமூக மற்றும் பொருளாதார நிலைமை குறித்து இந்த சபையின் புரிதலை நாங்கள் நாடுகின்றோம். எமக்கு முன்னால் உள்ள பல பணிகளில் ஈடுபடவும், சட்டபூர்வமான கடமைகளை மதிக்கவும் நாங்கள் உறுதியளிக்கின்றோம். இலங்கையானது பல தரப்புக் கட்டமைப்பில் பங்குபற்றுவதுடன், எமது மக்களுக்கு நீதி மற்றும் சமத்துவத்துடன் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சர்வதேச சமூகத்துடனும் மனித உரிமைகள் பேரவையுடனும் நெருங்கிய ஈடுபாட்டை இலங்கை தொடர்கின்றது - என்றார்.

(ஐ)

## ராஜபக்ஷக்களின்...

விலகினார் எனவும், எனவே ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகக்கூடும். இத்துடன், ராஜபக்ஷக்களின் அரசியல் முடிவுக்கு வருகின்றது என்று சமூக ஊடகங்களில் சில பதிவுகளைப் பார்த்தேன். சிறியவர் கள் மட்டுமல்ல பெரியவர்கள்கூட இந்தப் பதிவுகளை இட்டுள்ளனர்.

இவ்வாறு பதிவுகளை இடுவோர் ஒன்றை மாத்திரம் கவனத்தில்கொள்ள வேண்டும். அதாவது, ராஜபக்ஷக்கள் தத்தமது சுயவிருப்பத்தின் பிரகாரம் பதவிகளிலிருந்து விலகலாம். ஆனால், அவர்களின் அரசியலுக்கு ஒருபோதும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது. ராஜபக்ஷக்களின் அரசியல் பயணம் தொடரும். அந்தப் பயணத்தை எவரும் தடுத்து நிறுத்த முடியாது - என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். (ஐ)

## பின்தங்கிய...

எதிர்கொள்கின்றோம்.

இலங்கையில் பொரு ளாதார ரீதியில் பின்தங்கி யுள்ள பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள மக்களுக்கான நிவாரணத்தை வழங்கி உதவி செய்யுமாறும், மீள்எழுச்சி திட்டங்கள் தொடர்பான பேச்சுக்களின்போது சமூகப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குமாறும் நான் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன்.

நிர்வாகத்தில் அதிக வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கும் அனைத்து சமூகங்களுக்கும் நல்லிணக்கம், நீதியை முன்னெடுப்பதற்கும் ஆழமான கட்டமைப்பு சீர்த்திருத்தங்களில் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ)

## மனைவி...

தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமும் விலகலுக்கு காரணம் என்று கூறப்பட்டது.

ஆனால், குடும்பத்தினரின் கடும் வற்புறுத்தல் காரணமாகவே அவர் வெளியேறினார் என்று தென்னிலங்கை தரப்புக்கள் தெரிவிக்கின்றன. பஸில் விலக வேண்டும் என்ற கோரிக்கையை அவரின் மனைவியான புஷ்பாவே முன்வைத்தார் என்றும், அதன் பின்னர், அமெரிக்காவில் வசிக்கும் பிள்ளைகள் முன்வைத்தனர் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## 40சதவீத...

2020 மற்றும் 2021 கொரோனா தொற்றுநோய் பரவல் ஏற்பட்ட இரண்டு ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் வெகுவாக வீழ்ச்சியடைந்தது. இந்தக் காலப்பகுதியில் நாட்டின் சராசரி குடும்ப மாத வருமானமும் மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு முன்பாக குடும்பம் ஒன்றின் சராசரியாக ரூ. 76,414 மாத வருமானத்தை ஈட்டியுள்ளது.

கொரோனா தொற்றின் முன்னர் 3.7 நபர்களை கொண்ட ஒரு சராசரி குடும்பத்தின் மாத வருமானம் ரூ. 75,000இற்கு மேல் இருந்தது. எனினும், நாட்டில் நகர்புறம், கிராமம் மற்றும் மலையக தோட்டப்பகுதிகள் ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் இடையே வருமானத்தில் பெரியளவிலான வேறுபாடுகள் உள்ளன.

2019 தரவுகளின் அடிப்படையில் நகர்புற குடும்பத்தின் சராசரி வருமானம் ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 670 ரூபாயாகவும், கிராமப்புற குடும்பத்தின் சராசரி வருமானம் 69 ஆயிரத்து 517 ரூபாயாகவும், மலையக பெருந்தோட்டத் துறை குடும்பத்தின் சராசரி வருமானம் 46 ஆயிரத்து 865 ரூபாயாகவும் காணப்பட்டது.

2020, 2021ஆம் ஆண்டு கொரோனா தொற்றுக்காலத்தின் பின்மிகை பணவீக்கத்தின் விளைவாக குடும்ப வருமானம் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக குடும்பங்கள் மே 2022 வரை ஒரு வருடத்துக்குள் தங்கள் பெயரளவு வருமானத்தின் மதிப்பில் 40 சதவீதத்தை இழந்தன.

இலங்கையில் உள்ள வறிய குடும்பங்களில் 20 வீதமானவர்கள் ரூ. 17,572 மட்டுமே வருமானம் ஈட்டுவதாகவும், 40வீதமானவர்கள் ரூ. 26,931 வருமானம் ஈட்டுவதாகவும் கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையில் உள்ள பணக்கார குடும்பங்களில் 20 சதவீதத்தினர் சராசரியாக மாதத்துக்கு ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 289 ரூபாய் சம்பாதிக்கின்றனர். இருப்பினும் கடந்த ஆறு மாதங்களில் பணவீக்கம், விலையேற்றத்தால் அவர்களின் வாங்கும் திறன் வெகுவாக குறைந்துள்ளது.

நடுத்தர 60 சதவீத குடும்பங்கள் (3.7 நபர்களைக் கொண்டவை) சராசரியாக 56 ஆயிரத்து 79 ரூபாய் மாத வருமானத்தை ஈட்டியுள்ளன.

80 வீதமான குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை இது பிரதிபலிக்கிறது. இதேவேளையில் பணவீக்கத்தின் காரணமாக 40 வீதமானவர்கள் மோசமான வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம் - என்று அந்தத் தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நெருக்கடியிலிருந்து...

நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள் ளது என்றும், ஆனால் அதிக எண்ணிக்கையிலான தனியார் கடனாளிகள் காரணமாக சிரமங்களை அரசு எதிர்கொள் கின்றது என்றும் அவர் கூறினார்.

இந்திய ஊடக வலையமைப் பான வியொன் (WION) சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போதைய பொரு ளாதார மற்றும் அரசி யல் நெருக்கடிக்குத் தீர்வு காண நாட்டில் உள்ள அனைத்து அரசியல் வாதிகளும் ஒன்றிணைய வேண்டும்.

கடன் உதவி தொடர்பில் அரசு தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி வருகின்றது. அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் உதவி கோரும் அதேவேளையில், தற்போது நிலவும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண நன்கொடை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது.

இலங்கையின் கடன் நிலையான மட்டத்தில் இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கின்றது. எனவே, பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியபடி, இலங்கை அவசரநிலையை எதிர்கொள்கின்றது. எனவே, உலக வல்லரசுகளின் ஆதரவு தேவை.

ஏற்றுமதி சார்ந்த வணிக மாதிரியை அறிமுகப்படுத்துவதன் மூலம் பல மாற்றங்கள் செய்யப்படவேண்டும். இலங்கையைப் போட்டித்தன்மை வாய்ந்த பொருளாதாரமாக மாற்ற வேண்டும் - என்றார்.

அத்துடன், "கடனை மீளச் செலுத்துவதற்கும், அத்தி யாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும், நலிவடைந்த மக்களுக்கு நலன்புரி உதவிகளை வழங்குவதற்கும், அரசின் வருவாயை அதிகரிப்பதற்காக வரிமுறையை சீர்திருத்துவதற்கும் கூடு தல் நிதியை வழங்க வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்படும். மேலும், இலங்கை மீண்டும் உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாற வேண்டும் என்பதால் நிதி ஒழுக்கத்தை உறுதி செய்வதில் நான் கவனம் செலுத்துகின்றேன்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் போன்ற சில அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu







# தொடர்ந்து முகக்கவசம் அணிவதே பாதுகாப்பு!

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 14

உள்ளக மற்றும் வெளியரங்குகளில் தொடர்ந்து முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்னும் சுகாதார அமைச்சின் தீர்மானம் தமக்கு அதிருப்தி அளிக்கிறது என்றும், முகக்கவசம் அணிவது தற்போதைய நிலையில் ஆரோக்கியமானது எனவும் தெரிவித்துள்ள இலங்கை மருத்துவ நிபுணர் சங்கம், தொடர்ந்து பொது மக்களிடம் முகக் கவசம் அணியுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மருத்துவ நிபுணர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

பொதுமக்களுக்கு முகக்கவசம் அணியத் தேவையில்லை என்ற சுகாதார அதிகாரிகளின் முடிவு கவலை அளித்துள்ளது. மருத்துவமனை அமைப்புகளில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் முகக்கவசம் அணிவது அவசியமா என்பது குறித்து எதுவும் அமைச்சினால் குறிப்பிடப்படவில்லை.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவும் நிலையில் முகக் கவசம் அணிவது கட்டாயம் இல்லை எனும் அரசாங்கத்தின் முடிவு மிகவும் ஆபத்தானது.

இந்நிலையில், தற்போது நாட்டில் நிலவும் ஆரோக்கியமான சுகாதார விதிமுறைகளை மாற்றவேண்டாம். குறிப்பாக முகக்கவசம் கட்டாயம் இல்லை என்னும் முடிவை மாற்ற இது பொருத்தமான நேரம் அல்ல.

இத் தீர்மானத்தினால் தேவையற்ற சுவாச நோய் தொற்றுகளால் பாதிக்கப்படக்கூடிய முதியவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடு உள்ள மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

இந்நிலையில் இதனை தவிர்க்க அனைத்து தனிநபர்கள், நிறுவனங்கள் முகக்கவசம் அணியும் நடைமுறையை பின்பற்றவேண்டும்-என்றுள்ளது. (அ)

## Obituary

Born
27
-
12
-
1947



Rest
11
-
06
-
2022

### Mr.Kulathungam Rajakulasingam

Mr. Kulathungam Rajakulasingam was born in Manippay, Sri Lanka, Lived in Winnipeg, Canada and passed away peacefully on 11th June 2022.

He is the loving Son of Rajakulasingam and Amurthavallai and Son in law of Thirunathan and Nagaluxmy.Beloved Husband of Ranji Kulathungam.Loving Father of Shane, Charlene, Trisha and Jessica.Loving Father in law of Ashley, Ubanisha.Loving Brother of Rajayogi, Balasubramaniam, Rajapusphavally, Rajamanoharan, Rajeswary, Rajamanohari, Rajakulenthiran, Subashini.Loving Brother in law of Gnanasothy, Sri-Ramani, Tharmalingam, Sunthari, Vijayanathan, Shathiyamoorthy, Nirmala, Bhuvanraj.Loving Uncle of Nanthini, Shanthini, Ratheesh, Mathan, Karthiharan, Sharmili, Shagayani, Ubanisha, Melanie, Shilajen, Amieta, Shivani, Krithika, Jeyan.Much loved Grand father of Austin, Sloan, Eli, Evan, Amaya, Keyon, Mila, Ria, Vimeya, Athena, Ares, Dominic, Niko, Yshali, Athithyan, Kayla, Anika, Samika, Abini, Ashini.Funeral will be held in Winnipeg, Manitoba on Thursday June 16th 2022.This notice is provided for all the family and friends.

Informed by:
**Raj - Brother**

Contacts
**Raj - Brother - Mobile: +16477032683**
**Ranji - Wife - Mobile: +12042276376**
**Manoharan - Brother - Mobile: +12045836556**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
28
-
03
-
1953



**மறைவு**
09
-
06
-
2022

### திருமதி சாந்தநாயகி சிறிகாந்தா

யாழ். பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Ostermundigen, Bern ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சாந்தநாயகி சிறிகாந்தா அவர்கள் 09.06.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நடராசா, பாக்கியலஷ்மி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கந்தசாமி, முத்துமாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தசாமி சிறிகாந்தா அவர்களின் அன்பு மனைவியும், கோபிநாத் அவர்களின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகி, விமலநாயகி மற்றும் மகேஸ்வரன்(இலங்கை), பவளநாயகி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி (கொழும்பு, இலங்கை), விஜயராணி(யாழ்ப்பாணம்), புஸ்பராணி(Aarau, சுவிஸ்), சிறிரகு (Ostermundigen, சுவிஸ்), சிறிகுலேந்திரன்(Bern, சுவிஸ்), சிறிரவி (சுவிஸ்), செல்வராணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு
Monday, 13 Jun 2022 1:00 PM - 7:00 PM
Tuesday, 14 Jun 2022 1:00 PM - 7:00 PM
Bremgarten cemetery Murtenstrasse 51, 3008 Bern, Switzerland

கிரியை
Wednesday, 15 Jun 2022 1:00 PM - 3:00 PM
Bremgarten cemetery Murtenstrasse 51, 3008 Bern,Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கோபிநாத் - மகன்**

தொடர்புகளுக்கு:
**சிறிகாந்தா - கணவர்** Mobile : +41792910976
**கோபிநாத் - மகன்** Mobile : +41779556075

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
07
-
01
-
1931



**மறைவு**
11
-
06
-
2022

### வடகோவை பூ.க. இராஜரட்ணம்

*(ஓய்வுநிலை அதிபர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)*

யாழ்ப்பாணம், கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு, கொழும்பு வெள்ளவத்தை, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வடகோவை பூ.க.இராஜரட்ணம் ( ஓய்வு நிலை அதிபர், கோப்பாய் கிறிஸ்வதக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) அவர்கள் 11.06.2022 சனிக்கிழமை அன்று லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற திருமதி சரோஜினிதேவி இராஜரட்ணம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாநிதி பிரேம்ராஜ்(அவுஸ்திரேலியா), சசிகலா (லண்டன்), உதயராஜ்(லண்டன்), மேகலா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாராயணி, சிறீதரன், வணுஷியா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி, அன்னலட்சுமி, துரைசிங்கம் மற்றும் இராசமணி, காசிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பூமணி, இராசமணி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லவிண்ராஜ், அஸ்வின்ராஜ், ஜசின்ராஜ், சரன்ராஜ், பிரவீன்ராஜ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும்,டிலக்சன், பிவித்திகா, ஜக்சனா, மதுஜனா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
6 Dudley Road,
Harrow, HA2 0PR U.K.

தகவல்:
**பிரேம்ராஜ் - மகன்** +61478005488
**சசிகலா - மகள்** +447784384796
**மேகலா - மகள்** +447908603770
**வணுஷியா - மருமகள்** +447717042485

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அயோக்கியா,ஜக்பார்ட் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு